பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 18 வெள்ளிக்கிழமை 03.09.2021 கதிர் 302

**இனிது ரகசியம் அல்ல!**

ஆள்கள் வலிந்து காணாமலாக்கப்பட்ட பிரச்சினை மீண்டும் சர்ச்சைகளை ஏற்படுத்தி வருகின்றது. ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத் தொடர்களின் அமர்வுகள் ஆரம்பிக்க விருக்கையில் இத்தகைய சலசலப்புகள் பக்கம்02 »

## நேற்று சாவு 204 தொற்று 3,619

இலங்கையில் கொரோனா வைரஸ்தொற்றால்மேலும்204 பேர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்தார். ☞ 10

## அரிசி, சீனிக்கான விலை நிர்ணயம்

அரிசிவகைகள்மற்றும்இறக்குமதி செய்யப்படும் சீனி என்பவற்றுக்கு அதிகபட்ச சில்லறை விலையை விதித்து அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி இறக்குமதி செய்யப்படும் வெள்ளைச் சீனியின் ஒரு கிலோகிராமின் விலை 122 ரூபாவாக ☞ 10

## யாழில் நேற்று 6 பேர் மரணம்!

(எஸ்.நிதர்ஷன்)


யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மேலும் 6 பேர் கொரோனாத் தொற்றால் நேற்று உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் ☞ 10

# கோட்டாவின் அவசரகாலச் சட்டம்; விவாதிக்க திங்கள் விசேட அமர்வு

## சுமந்திரனின் நேரடி வலியுறுத்தலையடுத்து கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானம்





கொரோனாத் தொற்றுப் பரவலைச் சாதகமாகப் பயன்படுத்தி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் கடந்த 30ஆம் திகதி அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட அவசரகாலச் சட்ட ஒழுங்கு விதிகள் தொடர்பான பிரகடனத்தை எதிர்வரும் 06ஆம் திகதி திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் விவாதிக்க நேற்றுக் கூடிய கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. ☞ 10

### தன் உடலைத் தானம் செய்ய முனைந்த

## இளம் ஊடகவியலாளர் பிரகாஸ் கொரோனாத் தொற்றால் மரணம்



யாழ்.தென்மராட்சியைச் சேர்ந்த இளம் ஊடகவியலாளர் ஞானப்பிரகாசம் பிரகாஷ் (வயது 26), கொரோனா வைரஸ் தொற்றால் நேற்று உயிரிழந்துள்ளார்.

சுயாதீன ஊடகவியலாளராகப் பணியாற்றிய பிரகாஸ், சமூக வலைத்தளங்களில் ஆக்கபூர்வமான பணிகளை முன்னெடுத்தமைக்காகவும் சமூகத்துக்கு ஆற்றல் மிகுந்த பங்களிப்பை ☞ 10

## வவுனியாவில் மேலும் 159 பேருக்குத் தொற்று

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் மேலும் 159 பேருக்குக் கொரோனா ☞ 10

## ஜனாதிபதியின் திட்டத்தையும் தம்முடையது போன்று ஆட்டையைப் போடுகின்றார் அங்கஜன் இராமநாதன்!

### பெயர் குறிப்பிடாது பிரதமரின் இணைப்புச் செயலர் சாட்டை



கொழும்பு, செப். 03

"நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு என்ற ஜனாதிபதியின் வேலைத் திட்டமே அரசாங்கதின் செயல் திட்டமாக முன்னெடுக்கப்படுகின்றது. அரசாங்கத்தில் அங்கம் வகிப்பவர்கள் இத்திட்டங்களைத் தம் மக்களுக்காகப் பெற்றுக்கொடுக்க முன்வரவேண்டுமே தவிர, வேறு பெயரிலான திட்டங்களாக அறிவிப்பது உகந்ததல்ல."

–இவ்வாறு அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கின்றார் பிரதமரின் இணைப்புச் செயலாளர் காசிலிங்கம் கீதநாத்.

யாழ்.மாவட்ட இணைப்புக் குழுவின் தலைவரான ☞ 2



## போதனா பணிப்பாளராக மீண்டும் சத்தியமூர்த்தி



யாழ்ப்பாணம்போதனாவைத்தியசாலையின் பணிப்பாளர் பதவியை நாட்டில் நிலவும் ☞ 10



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஏற்படுகின்றமை வழமைதான்.

“காணாமல் போனமை எப்படி என்பதை ஆராய வேண்டாம் என்கின்றார் கோட்டா. அதில் குற்றத்தைத் தேடவே கூடாது என்றும் உத்தரவு” – என்ற சாரப்பட இரண்டு தினங்களுக்கு முன்னர் ‘காலைக் கதிர்’ முதலாம் பக்கத் தலைப்புச் செய்தி வெளியிட்டிருந்தது.

மெய்நிகர் முறையிலான கருத்தரங்கு ஒன்றில் நீதி அமைச்சர் அலி சப்ரி வெளியிட்ட கருத்துக்களை மேற்கோள் காட்டியே அச்செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

அந்தச் செய்தி தொடர்பில் நீதி அமைச்சருக்கு ஆட்சேபனை இருப்பதாக அறிகிறேன். பிற தரப்புகள் மூலம் எனக்கு எட்டிய தகவல் இது.

அவருக்கு மூன்று மொழியும் நன்கு தெரியும். தாம் ஆங்கிலத்தில் ஆற்றிய உரையின் சரியான வடிவம் – வேறு அர்த்தம் தராமல் – காலைக்கதிரில் பிரசுரமாகியுள்ளதா, இல்லையா என்பதை அவரே எடை போட முடியும். வேறு யாரும் மொழி பெயர்ப்பாளரின் உதவியும் அவருக்குத் தேவை இல்லை. அவருக்கு ஆட்சேபனை இருக்குமானால் அதனை அறிய ஆவலாக இருக்கிறோம்.

மற்றைய தென்னிலங்கை அரசியல்வாதிகள் போல மொழி அறிவு தெரியாதமையை வைத்து இவரை இடையில் நிற்போர் யாரும் தவறாகத் திசை திருப்ப முடியாது.

எனவே, அவரின் சொந்த ஆட்சேபனை யாது என்பதை அறியப் பார்த்திருக்கின்றோம்.

இந்தச் சமயத்தில் ஒரு குறிப்பு நிச்சயம் குறிப்பிட்டாக வேண்டும். அவர் பதவியேற்ற சமயத்தில் அவர் தொடர்பில் ஒரு செய்தி காலைக்கதிர் நாளிதழில் வந்திருந்தது.

இரண்டாவது நாள் ஒரு புதுத்தொலைபேசி இலக்கத்தில் இருந்து அழைப்பு வந்தது. நான் பேசினேன். மறுமுனையில் மிகப் பக்குவமாக – மிக மென்மையாக – கண்ணியமாக – ஒரு குரல் ஒலித்தது.

*“நான் நீதியமைச்சர் அலி சப்ரி பேசுகிறேன்.”* – என்று அமைதியாகத் தம்மை அறிமுகப்படுத்திப் பேசினார் அவர்.

இன்ன திகதியில், இன்ன செய்தி வந்தது, நான் சிங்களத்தில் பேசிய பேச்சு அது, தமிழ் மொழி பெயர்ப்பில் தவறு நேர்ந்திருக்கலாம், கொஞ்சம் கவனித்துக் கொள்ளுங்கள். – என்ற சாரப்பட அவர் குறிப்பிட்டார்.

மேற்படி சிங்களப் பேச்சையும் எங்கள் செய்தியையும் ஒப்பிட்டுப் பார்க்கிறேன், ஏதேனும் பாரிய வேறுபாடு இருந்தால் கவனிக்கிறேன், நீங்கள் இப்படி சுட்டிக் காட்டியுள்ளீர்கள் என்று ஒரு குறிப்பைப் பிரசுரிப்பதா என்றும் கேட்டேன்.

*“வேண்டாம், வேண்டாம். உங்கள் தகவலுக்காகத்தான் சொன்னேன். கொஞ்சம் கவனித்துக் கொள்ளுங்கள். அது போதும்.”* – என்றார் நீதி அமைச்சர் அலி சப்ரி. மிகுந்த மரியாதையுடன் மிகுந்த நீதியாகவே நடந்து கொண்டார்.

மேற்படி கடந்த செவ்வாய்க்கிழமை வெளியான எமது செய்தி தவறற்றது என்பதுதான் எமது நிலைப்பாடு. நீதி அமைச்சர் ஏதேனும் தவறு இருப்பதாகக் கருதுவாரேயானால் அது குறித்து ஆராயத் தயாராகவே உள்ளோம்.

★ ★ ★

புதிய தேர்தல் சீர்திருத்தம் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஜரூராகத்தான் பணியாற்றுகின்றது. நேற்று அதன் ஒரு கூட்டம் நடந்தது. மீண்டும் வரும் திங்களும், செவ்வாயும் அது கூடவிருக்கின்றது.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை எழுபது வீதம் வட்டார முறைத் தெரிவிலும், முப்பது வீதம் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைத் தெரிவிலும் மேற்கொள்ளக் கூடியதான கலப்புத் தேர்தல் முறையைப் பரிந்துரைக்க இப்போது கொள்கை அடிப்படையில் தீர்மானிக்கப் பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

அடுத்த கூட்டங்களில் மாகாண சபைத் தேர்தல்களுக்கான முறைமை குறித்துப் பரிசீலிக்கப்பட்டு முடிவெடுக்கப்படும் எனக் கூறப்பட்டது. அதன் பின்னரே பொதுத் தேர்தல் முறைமை குறித்து ஆராயப்படும் எனவும் தெரிகின்றது.

★ ★ ★

வருகின்ற திங்களும், செவ்வாயும் நடைபெறும் நாடாளுமன்ற அமர்வுகளும், விவாதங்களும் மிக முக்கியமானவை.

ஜனாதிபதி அறிவித்துள்ள அவசர காலச் சட்ட விதிகள் மீதான விவாதம் திங்களன்று வருகின்றது.

அதேவேளை வெளிநாட்டு வங்கிக் கணக்குகளில் அவரவர்கள் கறுப்புப் பணமாகப் பதுக்கி வைத்திருக்கும் தொகையை கணக்கு ஏதும் காட்டாமல் – எப்படி அந்தப் பணம் வந்தது என்பதை வெளிப்படுத்தாமல் – நாட்டுக்குள் கொண்டுவருவதற்கு வழி செய்யும் சட்ட மூலம், பங்குச் சந்தை வர்த்தகம் தொடர்பான புதிய சட்ட மூலம் எல்லாம் அடுத்த நாள் செவ்வாய்க் கிழமை விவாதித்து நிறைவேற்றப்பட இருக்கின்றன.

இதில் வெளிநாட்டில் முடக்கப்பட்டிருக்கும் கறுப்புப் பணத்தை வெள்ளையாக மாற்றுவதற்கு வழி செய்யும் சட்ட மூலம் மிக மிக முக்கியமானது.

முன்னைய ஆட்சிகளின் போது பல்லாயிரம் கோடி, டொலர்கள் ‘கமிஷன்’களாகச் சம்பாதிக்கப்பட்டு வெளிநாடுகளில் கறுப்புப் பணமாக முடக்கப்பட்டிருக்கின்றன என்று குற்றம் சுமத்தப்பட்டு வந்தது தெரிந்ததே.

ஊழலில் உழைத்துக் கறுப்புப் பணமாக முடக்கியவர்கள், நாட்டில் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தி, அதிலிருந்து மீளுவதற்காக வெளிநாட்டு முதலீடுகளைத் தருவிக்கிறோம் என்ற பெயரில் அந்தக் கறுப்புப் பணத்தை வெள்ளையாக்கிக் கொள்ளும் தந்திரத்தை இப்படி நகர்த்துகின்றார்கள் அவ்வளவுதான்.

தமது கறுப்புப் பணச் சேமிப்பை சமய சந்தர்ப்பம் பார்த்து வெள்ளைப் பணமாக்கும் நிதி முகாமைத்துவத் தத்துவம் இது...! இதில் அவர்(கள்) வல்லவர்(கள்)!

– மின்னல் –

## ஜனாதிபதியின் திட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அங்கஜன் இராமநாதன் எம்.பி. அந்தப் பதவி நிலை காரணமாக அரசாங்கத்தின் செயல்திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றமையைக் கண்காணிக்கும் பொறுப்பில் இருக்கின்றார்.

ஆனால், அரசாங்கத்தின் அத்திட்டங்கள் நிறைவேற்றப்படுவதால் வரும் பெயரைத் தமது ‘என் கனவு யாழ்’ திட்டத்தின் வெற்றிப் பெறுபேறு போல காட்டி, இதிலும் ஆட்டையைப் போடும் தம் கைவரிசையை அவர் காட்டுகின்றார் எனக் குற்றச் சாட்டு பரவலாக எழுந்துள்ள பின்னணியிலேயே பிரதமரின் இணைப்புச் செயலர் இந்த அறிக்கையை – குற்றஞ்சாட்டப் படுபவரின் பெயர் குறிப்பிடாமல் – தனது முகநூல் பதிவில் வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:–

கடந்த ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவினால் பத்து முக்கிய அம்சங்கள் அடங்கிய கொள்கைப் பிரகடனம் வெளியிடப்பட்டது.

தேசிய கொள்கைச் சட்டகத்தின் நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு என்னும் தொனிப்பொருளில், தேசியப் பாதுகாப்புக்கு முன்னுரிமை, நட்பு – சீரமைக்கப்படாத வெளியுறவுக் கொள்கை, ஊழல் இல்லாத நிர்வாகம், மக்களின் விருப்பங்களை நிறைவேற்றும் புதிய அரசமைப்பு, உற்பத்தித் திறன் மிக்க துடிப்பான மனித வளம், மக்கள் மையப் பொருளாதார வளர்ச்சி, தொழில்நுட்ப அடிப்படையிலான சமூகம், இயற்பியல் வளங்களின் வளர்ச்சி, நிலையான சுற்றுச்சூழல் மேலாண்மை, ஒழுக்கம் – சட்டத்தை மதித்தல் மற்றும் மதிப்புகள் சார்ந்த சமூகம் ஆகிய பிரதான பத்து அம்சங்களுக்கான அங்கீகாரமாகவே கோட்டாபய ராஜபக்ஷவுக்குப் பெருமளவான மக்கள் தங்கள் ஆதரவை வழங்கியிருந்தனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்று இருபது மாதங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு என்பதை முதன்மையாகக்கொண்டே நாடு முழுவதுக்குமான அபிவிருத்தி வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

உலகநாடுகள் அனைத்துமே எதிர்நோக்கியிருக்கும் இக்கட்டான நிலையிலும்கூட, தாம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவதில் சற்றேனும் பின்னிற்காமல், மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை எமது அரசாங்கம் துரிதமாகச் செய்துவருகிறது. இன, மத, பிராந்திய பேதமின்றி, இலங்கையர் என்ற ஒரே கூரையின்கீழ் இவ் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இத்தகைய சூழ்நிலையில், அரசாங்கத்தின் கொள்கைத் திட்டத்தை, கனவு திட்டம் என வேறு பெயர்களைப் பாவித்து மக்களைத் திசைதிருப்பும் நடவடிக்கையில் சிலர் இறங்கியிருப்பது துரதிர்ஷ்டவசமானது. அரசாங்கத்தின் நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு தேசிய வேலைதிட்டம் என்பது அனைவருக்கும் பொதுவானது.

இத்திட்டத்தை எப்பிரதேசத்தைச் சேர்ந்த அரசாங்கத்தில் அங்கம் வகிப்பவர்களும் தம் மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க முடியும்.

ஆனால், வேறு பெயரிலான திட்டங்கள்போன்று அதனை நடைமுறைப்படுத்த முடியாது. இத்திட்டங்கள் அனைத்துமே மக்களுக்காக ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையில் இடம் பெறுவனவாகும்.

அரசாங்கத்தில் அங்கம் வகிப்பவர்கள் இத்திட்டங்களைத் தம் மக்களுக்காகப் பெற்றுக்கொடுக்க முன்வரவேண்டுமே தவிர, வேறு பெயரிலான திட்டங்களாக அறிவிப்பது உகந்ததல்ல. மக்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கையை நாம் பெரிதும் மதிக்கின்றோம்.

அம்மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வேலைத்திட்டங்களையும் அபிவிருத்தியையும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வோம். – என்று உள்ளது.

# பல்கலையில் இடைநிறுத்தப்பட்டிருந்த பி.சி.ஆர். பரிசோதனை மீளவும் ஆரம்பம்

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மருத்துவபீடத்தில் இடைநிறுத்தப்பட்டிருந்த பி.சி.ஆர். பரிசோதனைகளை உடனடியாக ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் கொரோனா பரவல் அதிகரித்து வரும் நிலையில், பி.சி.ஆர். பரிசோதனைகளை உடனடியாக மேற்கொள்வதற்கான ஆளணியை நியமிப்பதற்குத் துணைவேந்தர் நடவடிக்கை எடுத்தமையை அடுத்து மூன்று பேர் பல்கலைக் கழகத்தின் நிதி மூலத்தில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட கொரோனா பி.சி.ஆர். ஆய்வுகூடத்தில் பணியாற்றி வந்த 4 மருத்துவ ஆய்வு கூடத் தொழில்நுட்பவியல் பயிலுநர்கள் உள்ளகப் பயிற்சிக்கான நியமனம் பெற்றுச் சென்றதால், பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான ஆளணிப் பற்றாக்குறை காரணமாக கடந்த மாதத்தின் நடுப்பகுதியில் இருந்து மருத்துவ பீடத்தில் பி.சி.ஆர். பரிசோதனைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. இதையடுத்து உடனடியாக ஒப்பந்த அடிப்படையில், பல்கலைக்கழகத்தின் நிதியில் இருந்து தற்காலிகமாகத் தேவையான ஆளணியை உள்வாங்குவதற்குத் துணைவேந்தர் பணித்திருந்தார்.

நேற்று இடம்பெற்ற நேர்முகத் தேர்வின் மூலம் மூன்று பேரை நியமிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதால், விரைவில் பி.சி.ஆர். பரிசோதனைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

# மரண அறிவித்தல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 29 – 05 – 1927 | 02 – 09 – 2021 |

## அமரர் சண்முகம்பிள்ளை கனகலிங்கம்

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் சங்கரத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம்பிள்ளை கனகலிங்கம் அவர்கள் 02.09.2021 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம்பிள்ளை செல்வலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை சுந்தரம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தனலட்சுமியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற அமிர்தலிங்கம், கனகாம்பிகை மற்றும் பரமலிங்கம், யோகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கலைச்செல்வி, குணச்செல்வன் மற்றும் காலஞ்சென்ற கருணானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், முருகவேல், சோபனா, சீத்தா ஆகியோரின் அன்பு மாமனாரும், கலாநிதியின் ஆசையப்பாவும், மாதங்கி, சேயோன், சாம்பவி, டயான், அருண்முகிலன், ஆர்த்தி, சாய்கிதன் ஆகியோரின் அன்புப் பேரனாரும், அகன்யனின் அன்புப் பூட்டப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2021) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காலை 7 மணியளவில் வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**2ஆம் கள்ளி ஒழுங்கை,
சங்கரத்தை வட்டுக்கோட்டை.**

**தகவல்:-குடும்பத்தினர்.
தொலைபேசி:0779007581**

காலைக்கதிர் Kalaikkathir

# மன்னாரில் மின்தகன நிலையம் அமைப்பதற்காக நகர சபையால் 50 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு



மன்னார் மாவட்டத்தில் மின்தகன நிலையம் அமைப்பதற்காக மன்னார் நகர சபையால் 50 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நகர சபையின் முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் நேற்று (வியாழக்கிழமை) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது இந்த விடயம் தொடர்பில் தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் -

மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழப்பவர்களின் சடலங்கள் வவுனியாவுக்கு கொண்டுசெல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டு வந்தன.

இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் மின் தகன நிலையம் ஒன்றை உடனடியாக அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதற்கமைவாக மன்னார் மாவட்ட செயலாளர் தலைமையில் அவசர கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டதோடு, மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் ஊடாக நிதி உதவி கோரப்பட்டது.

அதற்கமைவாக கடந்த புதன்கிழமை மன்னார் நகர சபையில் விசேட கூட்டம் கூட்டப்பட்டு கலந்துரையாடப்பட்டு மன்னாரில் அமைக்கப்படவுள்ள மின் தகன நிலையத்துக்கு 50 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்வது என சகல உறுப்பினர்களின் ஒத்துழைப்போடும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் பொது அஞ்சலி மண்டபம், சடலம் எரியூட்டும் இடத்துக்கு அருகில் கிரியைகளை செய்வதற்கு தேவையான இடம் மற்றும் மலசல கூடங்களை அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதுடன் இந்த வேலைத்திட்டங்கள் சில நாள்களில் ஆரம்பிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். மன்னார் மாவட்டத்தில் மின்தகனநிலையம் அமைக்க 3 கோடி ரூபா நிதி தேவை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், மன்னார் நகர சபை குறித்த நிதியை ஒதுக்கீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் அமுலிலுள்ள முடக்கம் உலகம் ஏற்றுக்கொண்ட முறைமை

## ஆளும்தரப்பு



இலங்கையில் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள முடக்கக் கட்டுப்பாடுகள் உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு முறை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

நேற்று (வியாழக்கிழமை) காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நிபுண ரணவக்க இவ்வாறு தெரிவித்தார். தனித்துவமான முடக்க கட்டுப்பாடுகளுடன் நாடு மூடப்பட்டாலும் பொருளாதார ரீதியாக முக்கியமான பல துறைகள் தொடர்ந்து செயற்பட முடிந்துள்ளது எனக் கூறினார். இதேவேளை ஆஸ்திரேலியா, நியூசிலாந்து உள்ளிட்ட சில நாடுகள் முடக்கத்தை அமுல்படுத்தினாலும், அவர்களால் கொரோனாத் தொற்று பரவுவதைத் தடுக்க முடியவில்லை என்றும் நிபுண ரணவக்க சுட்டிக்காட்டினார்.

பொருளாதாரம் சரிவடையாமல், நாடு முன்னேற வேண்டும் எனக் குறிப்பிட்ட அவர், ஐந்து ஆண்டுகளில் நாட்டின் பொருளாதாரத்தைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்தது என்றும் அவர் தெரிவித்தார்.

# நாட்டில் தீர்மானிக்கும் அதிகாரங்கள் சுகாதார அதிகாரிகளுக்கு வேண்டும்

## எரான் விக்ரமரத்ன வலியுறுத்து



அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகளினால் கொரோனா பரவலுக்கு எதிரான பாதுகாப்பு அரணை முன்கூட்டியே கட்டியெழுப்ப முடியாமல் போயுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

அதனால் இப்போது நம்மையும் நம்மைச் சார்ந்தவர்களையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது என்றும் அவர் கூறினார்.

எனவே இனிமேலாவது என்ன செய்யவேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை தொற்று நோய்த்தடுப்பு நிபுணர்கள் மற்றும் சுகாதாரப் பிரிவினரிடம் அரசாங்கம் வழங்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாடு முகம் கொடுத்திருக்கும் நெருக்கடி நிலை தொடர்பாக விளக்கமளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

# ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுடன் தொடர்புள்ள சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு



ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்ட சஹ்ரானின் சகோதரி உள்ளிட்ட 62 சந்தேநபர்களையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.சி.எம். றிஸ்வான் காணொலி மூலமாக நேற்று (வியாழக்கிழமை) இந்த உத்தரவை பிறப்பித்தார்.

அதன்படி, அவர்களை எதிர்வரும் 16ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

சகோதரி, சியோன் தேவாலய தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் என வெவ்வேறு வழக்குகளில் இவர்கள் சந்தேகநபர்களாகக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மூன்று பிள்ளைகளின் தந்தை யாழில் மின்னல் தாக்கி சாவு

யாழ்ப்பாணம் அச்சுவேலி பகுதியில் வயலில் உழுது கொண்டிருந்தவர் மின்னல் தாக்கத்துக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார்.

அச்சுவேலி நாவற்காடு பகுதியில் இந்தச் சம்பவம் நேற்று (வியாழக்கிழமை) பிற்பகல் இடம்பெற்றது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை (டிப்போ) சாலையில் பஸ் சாரதியாகப் பணியாற்றும் உடுப்பிட்டி பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான மதனராசா (வயது-40) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வயலில் உழவில் ஈடுபட்டபோது சம்பவம் இடம்பெற்றதாக அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரதேசவைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மேலும் ஒரு கோடியே 20 லட்சம் தடுப்பூசிகள் கிடைக்கவுள்ளன




இலங்கைக்கு மேலும் ஒரு கோடியே 20 லட்சம் கொரோனாத் தடுப்பூசிகள் கிடைக்கவுள்ளன என அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய எதிர்வரும் 2 மாதங்களுக்குள் இந்தத் தடுப்பூசிகள் கிடைக்கப்பெறவுள்ளன என விசேட வைத்தியர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

அதன்படி, 80லட்சம் சினோபோர்ம் தடுப்பூசிகள் மற்றும் 40 லட்சம் பைஸர் தடுப் பூசிகளே இவ்வாறு கிடைக்கவுள்ளன என அவர் தெரிவித்துள்ளார். இதுவரையில் இலங்கைக்கு 2 கோடியே 20 லட்சம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வல்வெட்டித்துறை நகர சபை தவிசாளர் தெரிவு ஒத்திவைப்பு

வல்வெட்டித்துறை நகர சபை தவிசாளர் தெரிவு கோரம் திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகர சபை தவிசாளர் தெரிவுக்கான அமர்வு, நேற்று (வியாழக்கிழமை) முற்பகல் 10 மணிக்கு நகர சபைக்குரிய மண்டபத்தில், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிரஞ்சன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, சுயேச்சைக் குழு உறுப்பினர்கள் மூவரும் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் இருவரும் என ஐவர் மட்டுமே அமர்வில் பங்கேற்றனர்.

இதனால் கோரம் காணாமையால் திகதி குறிப்பிடப்படாமல், தவிசாளர் தெரிவு அமர்வு ஒத்திவைக்கப்பட்டது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இயேசு காட்டிய வழி இதுவா?

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல்.பீரிஸ் தம்மைச் சந்திக்கக் கேட்டபோது அதை மறுத்து ஒதுக்கி விட்ட கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித், அந்தச் சந்திப்புக்கு நிபந்தனை விதித்திருக்கின்றார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை ஏற்று நடைமுறைப் படுத்தும் உத்தரவாதத்தை அரசு அளித்தால் மட்டுமே அவரைச் சந்திக்க முடியும் என்று தெரிவித்திருக்கின்றார் கர்தினால் மல்கம் ரஞ்சித். அவரின் அரசியல் நிலைப்பாட்டுத் திருக்கூத்து மூலம் தமிழ் மக்கள் மத்தியில் – குறிப்பாக தமிழ் கிறிஸ்தவ மக்கள் மத்தியில் – அவர் பற்றிய கருத்தியல் பலத்த சந்கேத்துக்கு உள்ளாகியிருக்கின்றது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

எல்லா மக்களையும் – மொழி, மதம், இனம் கடந்து – ஒரே மாதிரியாகப் பார்க்கும்படிதான் சமாதானப் பிரபு இயேசு பிரான் உலகுக்கு வழிகாட்டினார். அந்த இறைமகனின் – மனுக்குல வழிகாட்டியின் – உண்மையான போதனைப்படி, நியாயமான நெறிப்படுத்தலின் பிரகாரம், கர்தினால் மல்கம் ரஞ்சித் தாம் நடந்து கொள்கின்றாரா என்பதை அவரே தம் மனதைத் தொட்டு ஒரு தடவை உறுதிப்படுதிக் கொள்வது நல்லது.

இலங்கை மண்ணில் பாதிக்கப்பட்ட ஒரு தரப்பினரை நேசிப்பவராகக் காட்டும் அவர் மறுதரப்பாரை வெறுப்பவர் போன்று நடந்து கொள்கின்றார் என்பதுதான் உண்மை. ஒரு கண்ணில் வெண்ணெய் தடவும் அவர், மறுகண்ணில் சும்மா இருக்கவில்லை, சுண்ணாம்பு அப்புகின்றார் என்பதுதான் தமிழர்களின் வேதனை, வெப்பியாரம் எல்லாம்.

இந்த இலங்கைத் தீவில் ஈஸ்டர் ஞாயிறுத் தொடர்த் தாக்குதல் மனித குலத்துக்கு எதிரான பெரும் அட்டூழியம். ஆனால் இலங்கையில் அண்மைக் காலத்தில் அந்தப் பேரவலம் மட்டும்தான் நடந்ததாக இல்லை. அதைவிட பல நூறு மடங்கு கொடூரங்கள் இந்த இலங்கைத் தீவில் தமிழர்களுக்கு எதிராகப் பெருங்குரூரங்களாக – கட்டவிழ்த்து விடப்பட்டன. பல பத்தாயிரம் பேர் கோரமாகக் கொல்லப்பட்டனர். பல்லாயிரம் பேர் அங்கவீனமாகப்பட்டனர். பல பத்தாயிரம் பேர் காணாமலாக்கப்பட்டனர்.

இந்தக் கொடூரங்கள் தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டபோது மூச்சுக் காட்டாத கர்தினால் இப்போது அதிகம் துள்ளிக் குதிப்பது வேடிக்கையானது.

அது மாத்திரமல்ல, இந்தக் கொடூரங்கள் இழைக்கப்பட்ட போது அவர் சும்மா இருந்தவர் மாத்திரமல்லர், அந்தக் கொடூரங்களை இழைத்த தரப்புகளுக்கு ஆசீர்வாதம் வழங்கி, பாதிக்கப்பட்ட மக்களை நடு வீதியில் விட்ட 'மேய்ப்பர்' அவர்.

இப்போது ஒரு தரப்புக்காக மாத்திரம் குரல் எழுப்பும் அவரது போக்கு, அவர் அணிந்திருக்கும் கர்தினால் புனித உடைக்கே பொருத்தமற்றது. பொருத்தமற்றது மட்டுமல்ல இழுக்கானதும் கூட.

பல பத்தாயிரம் தமிழர்கள் வலிந்து காணாமலாக்கப்பட்டிருக்கின்றார்கள். அவை தொடர்பிலும் கற்றுக் கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழு, காணாமல்போனோர் குறித்து ஆராய்ந்த பரணகம விசாரணைக்குழு என்று ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன. அவை எல்லாம் பரிந்துரைகள் சமர்ப்பித்தன.

அவற்றை எல்லாம் நடைமுறைப்படுத்துமாறு நிபந்தனை விதிக்கும் நியாயப்பாடு கர்தினால் மல்கம் ரஞ்சித்துக்குத் தோன்றவில்லை. சுமார் 380 பேர் கொல்லப்பட்டு, ஐநூறு பேர் வரை காயமடைந்த தொடர் தாக்குதல் பற்றி மட்டும் அதிகம் துள்ளிக் குதிக்கின்றார் அவர்.

இப்போதும் கூட காணாமலாக்கப்பட்ட பல பத்தாயிரம் தமிழர்களின் அத்தகைய காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள் குறித்து விசாரிக்கவே மாட்டோம், உண்மைகளைக் கண்டறிய மாட்டோம், நீதியை நிலைநாட்ட மாட்டோம், பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்த மாட்டோம் என்று வெளிப்படையாகக் கூறி நிற்கின்றது கோட்டா அரசு. பல்லாயிரக் கணக்கில் கொல்லப்பட்ட தமிழ் மக்களுக்காக, அவர்களின் உறவுகள் ஒன்று கூடி நினைவேந்துவதற்குக் கூட அனுமதிக்க மாட்டோம் என்று பௌத்த, சிங்களப் பேரினவாத அரசு இனவெறி உச்சத்தில் திமிர்ப் பேச்சுப் பேசுகின்றது.

இவற்றை எல்லாம் கவனத்தில் எடுத்து – தமிழர்கள் மத்தியிலும் கிறிஸ்தவர்கள் இருக்கின்றார்கள் என்பதை உணர்ந்து – இந்தப் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் குரல் எழுப்ப மறுக்கும் இவர் எல்லாம் உண்மைக் கிறிஸ்தவரா என்பது கேள்விக் குறியே. பாதிக்கப்பட்ட ஒரு தரப்புக்காக மட்டும் குரல் எழுப்புபவர், மற்றைய தரப்பின் அவலத்தைக் கணக்கெடுக்காதவர் உண்மை மேய்ப்பர் அல்லர்.

## கொவிட் தொற்றுக்கு இலக்கானவர்கள் ஐவர்மெக்டின் மருந்தை பயன்படுத்த வேண்டாம்!

கொவிட் தொற்றுக்கு இலக்கானவர்கள் ஐவர்மெக்டின் மருந்து பயன்படுத்துவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என மக்களுக்கு அவசர அறிவிப்பொன்று வெளியிடப்பட்டுள்ளது. இந்த விடயத்தை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர் என சுட்டிக்காட்டி கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

ஐவர்மெக்டின் கொவிட் வைரஸுக்கு பலனளிக்கக் கூடியது என்பதற்கான உறுதியான ஆதாரங்கள் இல்லை.

இதனால் அந்த மருந்து பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். கொவிட்டைக் கட்டுப்படுத்துவதற்கும், தடுப்பதற்கும் சிலர் ஐவர்மெக்டினை பரிந்துரை செய்கின்றனர். உள்நாட்டில் இந்த மருந்து தொடர்பாக ஆராய்ந்து வருகின்றோம்.

ஆனால் இன்னமும் நாங்கள் இந்த மருந்தைப் பரிந்துரைக்கவில்லை. ஐவர்மெக்டின் என்பது ஒட்டுண்ணி நோய் தொற்றுகளுக்கு சிசிச்சை அளிக்கின்ற மருந்து.

எனினும் கடந்த சில நாள்களில் மக்கள் அதிகளவில் இந்த மருந்தைக் கொள்வனவு செய்வது தொடர்பாகத் தகவல்கள் கிடைத்துள்ளன. சில மருத்துவர்கள் கொவிட்டுக்கு சிகிச்சை அளிப்பதற்காக இந்த மருந்தை இறக்குமதி செய்யுமாறு வேண்டுகோள் விடுப்பதாகத் தெரியவருகிறது.

இதனையடுத்தே மக்கள் இந்த மருந்தைக் கொள்வனவு செய்து வருகின்றனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் இந்த மருந்தால் கொவிட்டைக் குணப்படுத்த முடியும் அல்லது தடுக்க முடியும் என ஆராய்ச்சிகள் மூலம் உறுதிப்படுத்தப்படும் வரை மக்கள் இந்த மருந்தைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என நிபுணர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர் என அந்தச் செய்தியில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மேலும், கொவிட் தொற்றாளர்களுக்கு வழங்கப்படுகின்ற ரொசில்சுமாப் என்ற மருந்தை நோய் நிலை தீவிரமடைந்த சந்தர்ப்பத்தில் வழங்கக் கூடாது என கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருந்தியல் தொடர்பான பேராசிரியர் பிரியதர்ஷினி கலபத்தி தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

குறித்த நோயாளர்களுக்கு இந்த மருந்தை வழங்கும் போது மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். இந்த மருந்து கொவிட் தொற்றாளர்களுக்கு வழங்குவதற்கு பொருத்தமான இரண்டாவது மருந்தாக உலக சுகாதார அமைப்பு அங்கீகரித்துள்ளது.

இருப்பினும், இந்த ரொசில்சுமாப் மருந்து கொவிட் நோய்க்காக தயாரிக்கப்பட்ட மருந்து அல்ல. இது மூட்டுவாதத்துக்காக தயாரிக்கப்பட்ட மருந்தாகும். அத்துடன், தற்போது கொவிட் நோயைத் தடுப்பதற்கு உள்ள ஒரு சிறந்த மருந்து தடுப்பூசியே.

ஒருவர் சளி, இருமல் போன்றவற்றால் பீடிக்கப்படுமிடத்து, அவர் கொவிட் தொற்றாளர் என யூகித்து சிகிச்சை அளிப்பது மிகவும் சிறந்தது என்றும் அவர் மேலும் அறிவுறுத்தியுள்ளார்.

## அரச ஊழியர்களின் சம்பளத்தை குறைக்கும் கட்டாயத்தில் அரசு

### ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு



அரசின் நடவடிக்கைகள் இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்துக்கு உதவாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் -

அவசர சட்டங்களின் மூலம் அரசின் செலவைக் குறைப்பதும் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விநியோகத்தைக் குறைப்பதும் நெருக்கடி நிலையைச் சமாளிக்க உதவாது.

அரசின் செலவுகளைக் குறைப்பதற்கான திட்டத்தை நிதி அமைச்சர் சமர்ப்பித்துள்ள நிலையில், அது வெற்றியளிக்காது.

மத்திய அரசு மற்றும் மாகாண சபைகளின் கீழ் வரும் அரச ஊழியர்களின் சம்பளங்களைக் குறைக்க நிதி அமைச்சர் முயற்சிக்கின்றாரா?

எனினும், அரச ஊழியர்களின் சம்பளத்தைக் குறைக்க வேண்டிய கட்டாயத்துக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது. இந்த நிலைமைக்கு ஆட்சியிலுள்ள அரசே முழுப் பொறுப்பு எனக் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கையின் கார்ட்போர்ட் சவப்பெட்டி சர்வதேச மட்டத்தில் பிரபலமடைந்தது



இலங்கையில் தயாரிக்கப்படும் கார்ட்போர்ட் சவப்பெட்டி சர்வதேச மட்டத்தில் அதிகம் பேசப்படுவதுடன், அதனைக் கொள்வனவு செய்யவும் சில நாடுகள் ஆர்வம் காட்டி வருகின்றன.

தெஹிவளை - கல்கிஸ்ஸ மாநகர சபையின் உறுப்பினர் பிரியந்த சஹபந்துவால் கார்ட்போர்ட் சவப்பெட்டி தயாரிக்கப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

அதற்கமைய 1,000 கார்ட்போட் சவப்பெட்டிகளை கொள்வனவு செய்வதற்கு உலகில் முதல் வெளிநாடாக வியட்நாம் முன்வந்துள்ளதாகத் தென்னிலங்கை ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

அந்த சவப்பெட்டிகள் எதிர்வரும் திங்கட்கிழமை கப்பல் மூலம் ஏற்றுமதி செய்யப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

கொவிட் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு 5 ஆயிரம் ரூபா என்ற சிறிய தொகையில் சவப்பெட்டி வழங்கும் நோக்கில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதாக சஹபந்து தெரிவித்துள்ளார். பொதுவாக மரப்பலகையிலான ஒரு சவப் பெட்டி செய்வதற்கு 2 மரங்களை வெட்ட வேண்டும் என்ற காரணமாக இந்த பெட்டி சுற்றுச்சூழலுக்கு நெருக்கமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சவப்பெட்டி அவசியம் ஏற்பட்டால் உடனடியாக கொள்வனவு செய்துகொள்ள முடியும் என மாநகர சபையின் உறுப்பினர் பிரியந்த சஹபந்து தெரிவித்துள்ளார்.

## சித்துல்பவ்வ புனித பூமியில் பெறுமதியான பொருள்கள் திருட்டு

வரலாற்றுச் சிறப்புமிக்க சித்துல்பவ்வ புனித பூமியில் பெறுமதியான பொருள்கள் புதையல் தோண்டும் திருடர்களால் களவாடப்பட்டுள்ளன என தொல்பொருள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டார்.

சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

## எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

அங்கம் - 64

ந.வித்தியாதரன்

இது ஊடக ஜாம்பவான் எஸ்.டி.சிவநாயகம் ஐயாவின் நினைவுப் பகிர்வு. இந்த நினைவுப் பகிர்வை ஒரு சர்ச்சைக்குரிய விவாதக் களமாக பயன்படுத்த நான் விரும்பவில்லை.அது பொருத்தமும் அன்று. எனினும் எனக்குத் தெரிந்த – நானறிந்த – சில விடயங்களை தெளிவுபடுத்திக் கொள்வது சரியானது என்று கருதியதால் எழுதுகிறேன். சிவநாயகம் ஐயாவின் நினைவுப் பகிர்வை ஒட்டி யாரையும் விமர்சனத்துக்கு உள்ளாக்கி, மன சஞ்சலத்தை ஏற்படுத்துவது என் நோக்கமன்று.

நான் இருபது வயது இளைஞனாகக் காலடி எடுத்த வைத்த போது – சிவநாயகம் என்ற ஊடக ஜாம்பவானை என் நினைவு தெரிந்து ஒருவராக நான் தரிசித்த போது – தமது ஊடகத்துறை வாழ்வில் முப்பது ஆண்டு கால சேவையை அவர் முடித்திருந்தார். அதற்கு முந்திய அவரின் பணியை அளவீடு செய்வதில் நான் கற்றுக்குட்டிதான். என்றாலும் கேள்விப்பட்ட இரண்டொரு விடயங்கள் நேர்சீர் செய்யப்பட வேண்டியவை என்ற கருத்தில் இதனை எழுதுகிறேன். நான் ஏற்கனவே குறிப்பிட்டவாறு சிவநாயகம் ஐயாவின் எழுத்துப் பணியில் வெளியான பல விடயங்களின் பதிவுகளும் பிரதிகளும் சுவடிகள் திணைக்களத்தில் இன்றும்



தவத்திரு குன்றக்குடி அடிகளார்

பாதுகாப்பாக உண்டு. அவற்றைப் பெற முடியும். அப்படி சில ஆதாரங்களுடன் இந்த விடயங்களைக் குறிப்பிடவே விரும்பி இருந்தேன். எனினும் இப்போதைய கொவிட் முடக்கங்கள், நெருக்கடிகளில் அரசு அலுவலகங்கள் செயல்படுவதில் உள்ள சிக்கல்கள் காரணமாக அது சாத்தியமற்றுப் போய் விட்டது. நான் வாசித்து அறிந்த, சிவநாயகம் ஐயாவுடன் பணியாற்றிய ஏனைய மூத்தோருடன் நான் அளவளாவி அறிந்த, ஒரு விடயத்தை தெளிவுபடுத்த விரும்புகிறேன். இது அறுபதுகளின் கடைசியில் பெரும்பாலும் 1968 இல் நடந்திருக்கலாம். அது பற்றிய செய்தியை நேரடியாக வாசித்த நினைவு எனக்கு உண்டு.

அச்சமயம் குன்றக்குடி அடிகளார் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். திருகோணமலையில் சில ஆண்டுகளுக்கு முன் காலமான தொண்டரின் ‘அருள் நெறி மன்றம்’ அமைப்புடன் அவர் மிகவும் நெருங்கிச் செயற்பட்டவர். தாழ்த்தப்பட்டவர்களுக்கும் ஆலயக் கதவுகள் திறக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி இலங்கையில் உண்ணாவிரதப் போராட்டங்களில் பங்குபற்றுவது குன்றக்குடி அடிகளார் இலங்கை



வந்த நோக்கங்களில் பிரதானமானது என்று பின்னாளில் – இருபது ஆண்டுகளின் பின்னர் அவர் என்னிடம் நேரில் சொன்னார் என்று நினைவு.

அவரின் இந்த இலங்கை வருகையை ஒட்டி ஒரு செய்தி தொடர்பில் தினபதி நாளிதழுக்கும் வீரகேசரி நாளிதழுக்கும் இடையில் ஒரு செய்திச் சமர் இடம் பெற்றது. ‘குன்றக்குடி அடிகளார் நஞ்சுண்ட காதை’ என்ற தலைப்பில் சிலகாலம் அந்த விடயம் மாறி மாறி கண்டனக் கணைகளோடு தொடர்ந்தது.

அது குறித்து என் நண்பர் ஒருவர் – மூத்த இலக்கியவாதி – கடந்த ஆண்டு தமது நினைவுப் பகுதியில் ஒரு விடயத்தைக் குறிப்பிட்டு இருந்தார்.

*“பரபரப்பான செய்திகளை வெளியிடுவதில் முன்னின்றவர் எஸ்.டி.சிவநாயகம்”* என்று குறிப்பிட்ட அவர், *“ஒரு தடவை குன்றக்குடி அடிகளார் இலங்கை வந்த சமயத்தில் அவருக்கு அருந்தத் தரப்பட்ட பாலில் விஷம் கலந்து இருந்தது என்று செய்தி வெளியிட்டவர்... குன்றக்குடி அடிகளாருக்கு தினபதி, சிந்தாமணி எழுதியிருந்தது போன்று பாலில் விஷம் கலக்கப்படவேயில்லை என்பதை வீரகேசரி ஆதாரத்துடன் செய்தி வெளியிட்டு சிவநாயகம் ஆசிரியராக இருந்த பத்திரிகைகளின் நாடகத்தை அம்பலப்படுத்தி இருந்தது. குன்றக்குடி அடிகளாரும் மனம் நொந்து கொழும்பு விட்டுப் புறப்பட்டார்”* என்று எழுதியிருந்தார்.

*“பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர்*
*நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்”*

– என்ற திருக்குறளை யாழ். கூட்டமொன்றில் உரையாற்றிய குன்றக்குடி அடிகளார் ஹாஸ்யமாக விளங்கப்படுத்தினார். அப்போது யாழ்ப்பாணத்தில் நண்பர் ஒருவர் வீட்டில் எனக்கு நஞ்சு தந்தார்கள், நான் நட்பு நாகரிகம் கருதி அதை மறுக்காமல் வேண்டி உண்டேன் எனக் குறிப்பிட்டார். அந்தக் கருத்தை அவர் கூறி முடிக்கும் சமயத்தில் கூட்டத்துக்கு வந்து சேர்ந்த செய்தியாளர் ஒருவர் அதற்கு முன் பின் குறிப்பிட்ட விடயங்களை அறியாது ‘குன்றக்குடி அடிகளாருக்கு யாழ்ப்பாணத்தில் நஞ்சு கொடுத்தார்கள்’ என்று சாரப்பட செய்தி எழுத, அது வீரகேசரியில் பிரசுரமாகி, பெரும் பரபரப்பை – களேபரத்தை – ஏற்படுத்தி விட்டது.

அந்தக் கூட்டத்தை முடித்துக் கொண்டு திருகோணமலை அருள்நெறி மன்றத்துக்கு வந்து சேர்ந்த குன்றக்குடி அடிகளார், அங்கு தனது நெருங்கிய அன்பர்களான தொண்டர், ‘தினபதி’ – ‘சிந்தாமணி’யின் திருகோணமலை நிருபர் சி.குருநாதன் போன்றோரிடம் இச்செய்தி தொடர்பான தமது வேதனையைப் பகிர்ந்து கொள்ள, உண்மையில் நடந்தது என்ன என்ற தகவலை வீரகேசரிக்கு பதிலடியாக தினபதி பிரசுரித்தது. யாழ்ப்பாணத்தில் தமக்கு நஞ்சு வைத்தனர் என்றுதான் குன்றக்குடி அடிகளார் பேசினார் எனக் குறிப்பிட்டு அவரது பேச்சை வார்த்தைக்கு வார்த்தை பிரசுரிப்பதாகக் குறிப்பிட்டு வீரகேசரியும் பதிலடி தந்தது. அதற்கு தினபதி தந்த பதிலடியின் தலைப்பின் சாரம் இன்றும் – சுமார் ஐம்பது ஆண்டுகள் கடந்தும் எனக்கு நினைவில் உண்டு. *“குன்றக்குடி அடிகளார் நஞ்சுண்டகாதை: அடிகளாரின் பேச்சின் முண்டத்தைப் பிரசுரித்த வீரகேசரி முழுவதையும் பிரசுரிக்குமா?”* என்ற சவால் விடும் தலைப்பில் அது அமைந்தது.

அந்தச் சர்ச்சையை மீண்டும் கிளறி, அதையொட்டி சிவநாயகம் ஐயாவை ஒரு கதாநாயகனாகவோ அல்லது ஒரு வில்லனாகவோ காட்டுவது அல்ல என் நோக்கம்.

ஆண்டுகள் பல கழிந்ததும் ஓர் எழுத்தாளன் எப்படிப் பார்க்கப்படுவான் என்பதற்கான ஒரு உதாரணம் மட்டுமே இது.

சிவநாயகம் ஐயாவின் பத்திரிகை எடுத்த ஒரு நிலைப்பாட்டுக்கு மாறான நிலைப்பாட்டில் என் நண்பரினால் அவர் விமர்சிக்கப்பட்டார் என்பதால் இதைச் சொன்னேன்.

இது குறித்து யாரேனும் சர்ச்சைகள் கிளப்புவார்களாயின் நெருக்கடி கொஞ்சம் தணிந்ததும், தினபதி, வீரகேசரி ஆகிய பத்திரிகைகளில் இந்த விடயத்தை ஒட்டி வெளியான செய்திகளை, சுவடிகள் திணைக்களத்தில் தேடிப்பிடித்து, எடுத்து, ஆதாரங்களுடன் வெளியிடலாம் என்று நினைக்கிறேன்.

கேள்விச் செவியர்கள் மூலம் அவ்வப்போது நான் திரட்டிய தகவல்கள் – என்னுடன் பயணித்த சில, பல மூத்த பத்திரிகை நண்பர்களின் சாட்சியங்கள் – என் பதின்ம வயதுச் செய்தி வாசித்த நினைவுகள் – ஆகியவற்றின் அடிப்படையில் குன்றக்குடி அடிகளார் நஞ்சுண்ட காதை தொடர்பில் நான் முன்வைத்த மேற்படி கருத்துக்கள் தவறு எனில், ஆதாரங்களின் அடிப்படையில் அவற்றை திருத்தித் தெளிவுபடுத்தவும் நான் தயாராக இருக்கிறேன்.

குன்றக்குடி அடிகளார் இப்போது இல்லை. ஆனால் அவர் திருகோணமலையுடன் – எனது ஊருடன் – நெருக்கமான பரிச்சயம் கொண்டு இருந்தவர். அதனால்தான் திருகோணமலை மண்ணில் அருள் நெறி மன்றம் ஆரம்பிக்கப் பட்டு அருள்நெறி போதித்தது.

1988 பெப்ரவரி மாதத்தில் ஒரு தடவை சென்னையில் நான் அவரை நேரில் சந்தித்து உதயன் – சஞ்சீவிக்காகப் பேட்டி கண்டேன். அச்சமயம் இளைஞரான என்னுடன் நீண்ட நேரம் அவர் மனம் திறந்து பேசினார். நான் திருகோணமலையைச் சேர்ந்தவன் என்பதால் அவருக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. திருகோணமலையில் தான் நெருங்கிப் பழகிய தொண்டர், செய்தியாளர் குருநாதன், என் மைத்துனர் வரதசுந்தரம் போன்ற – திருகோணமலை அருள்நெறி மன்றத்தில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்ட – பலர் மீதும் குன்றக்குடி அடிகளாருக்கு இருந்த வாஞ்சையை நான் அப்போது புரிந்து கொண்டேன்.

நாகரிகம் கருதி நான் நஞ்சுண்ட காதை என்ற பழைய விடயத்தை கிளறவில்லை. நான் தினபதி, சிந்தாமணி பண்ணையில் விளைந்தவன், இப்போது உதயனில் பணிபுரிகிறேன் என்ற போது தினபதி மீதான அவரின் நெருக்கத்தை அவரின் விசாரிப்பில் இருந்து புரிந்து கொண்டேன். உதயனுக்கு எழுதிய அவரின் பேட்டியில் அது குறித்து அப்போது குறிப்பிட்டேன் என்றும் நினைவு.

அரசியல் ரீதியாக சிவநாயகம் ஐயா வெளிப்படையாக பல விடயங்களை முன் வைத்தவர். அந்த நேரத்தில் அந்த உண்மைகள் பலரைப் பச்சையாகவே சுட்டன. உண்மை எப்போதும் சுடும் என்பது நிஜம்தானே.


ஆனால் அதுதான் நிஜம். யதார்த்தம். பெறுபேறு இப்படித்தான் அமையும் என்று சிவநாயகம் ஐயா குறிப்பிட்டபோது அவரை ‘துரோகி’ என்றார்கள். கடைசியில் அவர் கூறியவையே ஆண்டுகள் பல கழிந்து நிஜமான போது வாயடைத்து நின்றனர். அவரைத் தீர்க்கதரிசி என்று குறிப்பிட அவர்களுக்கு வாயும் வரவில்லை; மனமும் வரவில்லை. அவற்றைத் தொடர்ந்து பார்ப்போம்.

(வளரும்)

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

**தரம் - 10,11** **விஞ்ஞானம்**

(01) கணிப்பீட்டுப் பரீட்சைக்காக மாணவர்களால் ஆய்வு கூடத்தில் செய்யப்பட்ட பரிசோதனை பின்வருமாறு





(A)
(i)மேற்காட்டப்பட்ட பரிசோதனையின் நோக்கம் யாது?
(ii)மேற்காட்டப்பட்ட படத்தில் A,B,D,E எனும் குடுவைகளினுள் அடங்கியுள்ள பதார்த்தங்களின் பெயர்களினைத் தருக?
(iii)B எனும் குடுவையிலுள்ள பதார்த்தத்தின் தொழில் யாது?
(iv)D எனும் குடுவையில் தென்படும் மாற்றத்தினை விளக்குக?
(v)தவளையின் சுவாச செயன்முறையின் இரசாயன சமன்பாட்டையும் சொற் சமன்பாட்டினையும் தருக?

(B) பல்வேறு தொழில்களை ஆற்றுவதற்காக சிறத்தலடைந்த கலங்களின் கூட்டம் இழையம் எனப்படும்.
(i)பிரிகை அடையும் ஆற்றலுக்கு ஏற்ப தாவர இழையங்களை வேறுபடுத்திக் காட்டுக?
(ii)பிரிஇழையத்தின் இயல்புகள் 5 தருக?
(iii) இழையங்கள் எத்தனை வகைப்படும்? அவை எவை?
(iv) ஒரு பரிசோதனையில் புற்தாவரம் ஒன்றின் கணுவிடை நீளம் அதிகரித்து இருப்பது அவதானிக்கப்பட்டது. அதற்கு காரணமான பிரியிழைய வகை யாது?

(C)
(i)தாவரங்களில் கொண்டு செல்லலுக்காக சிறத்தலடைந்த சிக்கலான நிலை இழையங்கள் எவை?
(ii) இவை இரண்டுக்கும் இடையிலான வேறுபாடுகள் 3 தருக?
(iii) அவை ஒவ்வொன்றிற்கும் தொழில்கள் 3 வீதம் தருக?
(iv)தாவரங்களில் ஒளித்தொகுப்பு என்றால் என்ன?
(v) ஒளித்தொகுப்பின் பயன்பாடு 4 தருக?

(02)
(A)
(i) அலைகள் எத்தனைவகைப்படும் அவை எவை?
(ii) அலையின் வீச்சம் என்றால் என்ன?
(iii) காமாகதிர்கள், செங்கீழ் கதிர்கள், வானொலி அலைகள், கட்புலக் கதிர்கள் என்பவற்றினை மீடிறன் வரிசையில் ஒழுங்கு செய்க?
(iv)மின்னல் தாக்கத்தின் போது முதலில் ஒளியையும் பின்பு சத்தத்தையும் அவதானிக்க முடிகின்றது.
இத் தோற்றப் பாட்டினை விஞ்ஞான ரீதியாக விளக்குக?
(v) ஒரு பரும்படியான குறுக்கலை ஒன்றின் இடப்பெயர்ச்சி நேரவரைபை வரைந்து முடி, தாழி,வீச்சம் என்பனவற்றைக் குறிக்குக?


(B) தன்னியக்க துரொல்லி ஒன்றின் வேக - நேர வரைபு படத்தில் காட்டப்பட்டுள்ளது.




(i)20 S நேரத்தில் துரொல்லியின் இயக்கத்தினை விளக்குக?
(ii) முதல் 5 S இல் துரொல்லியின் ஆர்முடுகல் யாது?
(iii)10 ஆவது செக்கனில் இருந்து 20 ஆவது செக்கன் வரை துரொல்லியில் தாக்கும் விளையுள் விசை யாது?
(iv)வினா 3 இல் நடைபெறும் நிகழ்வினை விளக்கும் நியூட்டனின் இயக்க விதியைத் தருக?

(C)
(i)சக்தி என்றால் என்ன? சக்திக்கு 5 உதாரணங்கள் தருக?
(ii) ஒரு 10kg குற்றியானது 100m தூரத்துக்கு உயத்தப்படுகின்றது.
(a)உயத்துவதற்கு தேவையான சக்தி யாது?
(b)அவ் உயரத்திலிருந்து குற்றியானது விடப்பட்டால் தரையை அடையும்போது குற்றியின் வேகம் யாது? (விழும்போது சக்தி இழப்பு 0 ஆகும். புவியீர்ப்பிலான ஆர்முடுகல் $10ms^{-2}$ என்க.)
(c)தரையை அடையும் போது அதன் இயக்க சக்தி யாது?
(d)வினா (a) இல் நீர்கூறிய விடைக்கும் வினா (c) இல் நீர் கூறிய விடக்கும் இடையிலான தொடர்பு யாது? அதற்கான காரணம் யாது?
(e) இங்கு நடை பெற்ற சக்தி மாற்றம் யாது?

(03)




(A)
(i) கலவை என்றால் என்ன?
(i) இரசாயனச் சேர்வைகள் எத்தனை வகைப்படும்? அவை எவை?
(iii) ஏகவினக் கலவை என்றால் என்ன?
(iv)பல்லினக் கலவை என்றால் என்ன?
(v) கரைதிறனில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் 3 தருக?
(vi)பின்வரும் படத்தில் ஒட்சிசன் வாயு தயாரிப்பதற்காக மாணவர்களால் மேற் கொள்ளப்பட்ட பரிசோதனை அமைப்பு காட்டப்பட்டுள்ளது.

(B)
(i) படத்தில் குறிக்கப்பட்ட A- E வரையானவற்றைப் பெயரிடுக?
(ii) இங்கு B யில் நடைபெறும் தாக்கத்தினை சமப்படுத்திய இரசாயனச் சமன்பாட்டின் மூலம் காட்டுக?
(B என்னும் பதார்த்தம் வெப்பப்பிரிகை அடையும் போது ($MnO_2$) மங்கனீரொட்சைட்டு வெளிவிடப்படுகின்றது.)
(ii)இங்கு ஒட்சிசன் வாயு சேகரிக்கப்படும் முறையைத் தருக?
(iv) ஆய்வு கூடத்தில் ஒட்சிசன் வாயு தயாரிப்பதற்கான வேறு இரசாயனச் சமன்பாடுகளைத் தருக?
(V) ஒட்சிசன் வாயுவின் வேறு பௌதிக இயல்புகள் 4 தருக?

(C)
(i)தாக்க வீதம் என்றால் என்ன?
(ii)தாக்கவீதம் மீது செல்வாக்கு செலுத்தும் காரணிகள் 4 தருக?
(iii)தாக்கமொன்றில் ஊக்கிகள் என்றால் என்ன?

**ஆக்கம் : திரு. V. டினோஜன்**

# 500 கிராம உத்தியோகத்தர்கள் கொவிட் காரணமாகப் பாதிப்பு!

## 5 பேர் உயிரிழப்பு

கொழும்பு, செப். 03

கொவிட் பெருந்தொற்று காரணமாக இதுவரையில் சுமார் 500 இற்கும் மேற் பட்ட கிராம உத்தியோகத்தர்கள் பாதிக்கப் பட்டுள்ளமையுடன், ஐந்து பேர் உயிரிழந் துள்ளனர்.

இலங்கை ஐக்கிய கிராம உத்தியோ கத்தர்கள் சங்கத்தின் பிரதம செயலாளர் எஸ்.ஏ. சீலமன்ஆராச்சி, இந்த விடயம் தொடர்பாக சுதேச விவகார இராஜாங்க அமைச்சின் செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

கிராம உத்தியோகத்தர் ஒருவர் தனி மைப்படுத்தலில் இருந்தால் இதுவரை யில் வழங்கப்பட்டு வந்த 10 ஆயிரம் ரூபா உலர் உணவுப் பொருள்கள் தற் பொழுது குறைந்த வருமானம் ஈட்டும் மக்களுக்கு மட்டுமே வழங்கப்படுகின் றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் குடும்பத்துடன் தனிமைப் படுத்தலில் இருக்கும் கிராம உத்தியோ கத்தர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர் நோக்கி வருகின்றனர் எனக் குறிப்பிட் டுள்ளார்.

கிராம உத்தியோகத்தர்களும் பெரும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தி யில் தங்களது கடமைகளை மேற் கொண்டு வருகின்றனர் எனத் தெரிவித் துள்ளார்.

இவ்வாறு கடமைகளில் ஈடுபட்டு வரும் கிராம உத்தியோகத்தர்களுக்கு அமைச்சு மட்டத்தில் நிவாரணங்களை வழங்க வேண்டுமெனக் கடிதத்தில் கோரியுள்ளார்.

# கொவிட் தொற்றுடன் ஒரே பிரசவத்தில் 3 குழந்தைகளைப் பெற்றெடுத்த தாய்!

புத்தளம், செப். 03

கொவிட் வைரஸ் தொற்றுக்குள்ளா கிய நிலையில் சுமார் 14 நாள்களாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கர்ப்பிணிப் பெண்ணொருவர் 3 குழந்தைகளை பிரசவித்துள்ளார்.

குறித்த கர்ப்பிணிப் பெண் கடந்த 6 வாரங்களுக்கு முன்னதாக கொவிட் தொற்றுக்கு உள்ளான நிலையில்,சுமார் 35 வாரங்களுக்கு பின்னர் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் குழந்தை களை பெற்றெடுத்துள்ளார்.

சிசேரியன் அறுவைச் சிகிச்சை மூல மாக குறித்த மூன்று குழந்தைகளும் பிறந்துள்ளன என வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

குறித்த பெண் ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகளில் இரண்டு பெண் குழந்தை களையும், ஓர் ஆண் குழந்தையையும் பிரசவித்துள்ளார்.

தற்போது, தாய் மற்றும் குழந்தைகள் அனைவரும் நல்ல உடல் ஆரோக்கியத் துடன் இருக்கின்றனர் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 119



**332. அந்த அங்கலாய்ப்புகளையும் மேவி ஏதும் செய்யப்பட்டதா?**

அதேசமயம் முகாம்களுக்கு வந்தவர்களிடமிருந்தும் அவர்களது சில உறுப்பினரிடமிருந்தும் விடுதலைப் புலிகளுக்கிடையே இருந்த மனக்கிலேசங்களை சொல்லி அவர்கள் கைவிடப்பட்டுள்ள நிலையில் உள்ளார்கள், ஆதலால் ஏதும் செய்யுமாறு கேட்டார்கள்.

அவர்கள் தெரிவித்தவையின் படி, கடைசி வரை நின்று போராடுவதா, வெளியேற மார்க்கங்கள் தேடுவதா, சரணடைவதா என்ற அபிப்பிராய பேதங்கள் அங்கு தோன்றியிருந்தன எனத் தெரிந்தது. இவற்றின் எதிரொலியாக மண்ணில் இருக்கும் முக்கிய தலைவர்களுக்கு ஏதும் நடந்தால் புலம்பெயரில் யார் தலைமை தாங்குவது, பொறுப்பாளராக வருவது என்ற போராட்டமும், புலம்பெயர் வியாபாரங்களில் நம்பிக்கையானவர்கள் மூலம் முடக்கப்பட்டுள்ள பணம், அதன் நிர்வாகம், மற்றவர்கள் புனர்வாழ்வுக்கு நிதி சேகரிக்க விடப்பட்டால் அவற்றால் ஏற்படக் கூடிய தாக்கங்கள் என்பன புலம்பெயர் அமைப்புக்குள்ளும் கருத்து வேற்றுமைகளை தூண்டி உட்பூசல்களைக் கிளப்பின. இவை கடைசிக் கட்டங்களில் அவர்கள் ஊசலாடி கொண்டிருந்த பொழுது விரக்தியை தந்தன. அந்தச் செயற்பாடுகளை பின்னர் பார்க்கலாம்.

ஆனால் நாங்கள் புதுக்குடியிருப்பில் இருந்து வெளியேறிய அவல நிலைகளாலும், அதில் பலர் அங்கு நிற்கும் விடுதலைப் புலிகளின் உறவினர்கள், அவர்களும் வாழத் துடிக்கிறார்கள், செய்வதறியாது தவிக்கிறார்கள் என்று கேட்டதினாலும் தன்னார்வத் தொண்டில் ஈடுபட்டிருந்த பலரினதும் வேண்டுகோளாலும் முடியக் கூடியது என்று பட்டதை முன்னெடுத்தோம்.

**333. முகாம்களுக்கு வந்தவர்களிடம் இருந்து என்ன அறியக்கூடியதாக இருந்தது?**

விடுதலைப் போராளிகள், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக பல நிலைகளில் போராடியவர்கள் போன்றவர்களின் உறவுகளே இவர்கள். அவர்கள் வெளியேறவே விரும்புகிறார்கள். ஆனால் வழியில்லாது அந்தரப்படுகிறார்கள். அவர்களுக்கு சாவைக் கொடுக்காமல் ஏதாவது செய்யுங்கள் என ஆதங்கப்பட்டார்கள்.

இந்த மக்கள் தாங்கள் ஆனந்தபுரத்தில் இருந்த பொழுது அறிந்துகொண்ட அளவில், விடுதலைப் புலிகளும் பிரபாகரனும் அவ்வளவு கெதியாக இராணுவம் தங்கள் பகுதிகளுக்குள் ஊடுருவி வரும் என நினைக்கவில்லை.அல்லது தப்புக்கணக்குப் போட்டார்கள். ஆனால் அவர்களது தளபதிகளின் முனைப்பில் இருந்து தங்களை அசைக்க முடியாது என்ற ஒரு அசாத்திய தைரியத்தில்தான் இருந்தார்கள். கிளிநொச்சி விழுந்தவுடன், அதில் மக்கள் பலர் காயப்பட்டமையுடன், ஏ – 9 பாதையை இழந்தபோதுதான் நிலைமையை உணர்ந்து கொண்டு, தங்களையும் பாதுகாப்பாகப் புதுக்குடியிருப்புப் பகுதிகளுக்கு மாற்றினார்கள். கிளிநொச்சியிலிருந்து மக்கள் தாக்குதலுக்கு ஆளாக நடவடிக்கைகளை அவர்கள் முடுக்கி விட்டனர்.

பின்னர், இந்த அட்டூழியங்களுக்கு எதிராக அழுத்தங்கள் கொடுக்கப் புலம்பெயர் மக்கள் தங்கள் தங்கள் நாட்டு அரசாங்கங்களை வலியுறுத்தி போராட்டம் நடத்துகிறார்கள். வெகுவிரைவில் ஒரு போர்நிறுத்தம் வந்து விடும் என்று தெம்பு தந்தார்கள். சிறிது காலம்தான் தாக்குப்பிடிக்க வேண்டும், அதற்கான வியூகங்கள் போட்டாயிற்று என்றும் நம்பிக்கை தந்தார்கள். அதே சமயம் தமிழ்நாட்டிலும் எதிர்ப்புகளும் ஆர்ப்பாட்டங்களும் நடப்பதால், அந்தத் தேர்தலில் ஜெயலலிதாவும் போருக்கு எதிராக – தங்களுக்கு ஆதரவாக – பேசுவதால் புதுடெல்லி இவற்றைக் கணக்கெடுத்து, நிலைமை மோசமாகப் போகவிடாமல் கட்டுக்குள் கொண்டு வந்து விடும், இந்தியா கைவிடாது என்று தாங்கள் நம்பி இருந்தனர் எனவும் பரிதவித்தார்கள். ஆனால் புதுக்குடியிருப்பு, ஆனந்தபுரம் சண்டைகளுக்கு பின் அது விடுதலைப் புலிகளையும் உலுப்பி, தங்களுக்கும் இனித் தாக்குப்பிடிக்க முடியாது என்று எண்ணம் தந்தது எனக் கூறினர். இதனால் அவர்கள் வெளியேறினார்கள். அவ்வளவு தளபதிகளையும் போராளிகளையும் இழந்தும் கூட, புலம்பெயர் மக்களின் எதிர்ப்புகளாலும், போராட்டங்களாலும் மஹிந்த பணிந்து வந்து, ஒரு போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவார் எனவே பிரபாகரன் நம்பியிருந்தார். போராளிகளும் மக்களும் எவ்வளவோ சொல்லியும் தனக்கிருந்த நம்பிக்கையில் அவர் அந்த நேரத்தில் வன்னிப் பரப்புக்குள்ளோ அல்லது மணலாற்றும் பகுதிகளுக்குள்ளோ வெளியேறி மறைந்து கொண்டிருக்கலாம். ஆனால் செய்யவில்லை. அல்லது கடல்மார்க்கமாக வெளியேறி இருக்கலாம். அதற்கு விரும்பவில்லை. தனது பிடிவாதத்தை விடவில்லை. ஆனால் போராளிகளிடையேயும் தளபதிகளிடையேயும் தோன்றிய அங்கலாய்ப்புக்களிலும் நிலைமை மோசமாவதைக் கணித்தும் பிரபாகரன் சர்வதேச அமைப்பாளராக நியமிக்கப்பட்டிருந்த கே.பியை அணுகினார். அவரை நேரடியாக இறங்கி ஒரு போராட்ட நிறுத்தத்தை ஏற்படுத்தக் கேட்டார். உடனடியாகவே காரியங்களில் இறங்கிய கே.பி. முதலாவதாக நோர்வேயை அணுகி, அவர்களின் உதவியுடன் ஐரோப்பிய நாடுகளையும் சேர்த்து, ஐ.நாவை அணுகி, அதன் காரியதரிசி பான் கீ மூனின் பிரதிநிதியாக ஸ்ரீலங்காவில் நிலைகொண்டிருந்த விஜய் நம்பியாருடனும் தொடர்பில் இருந்தார். அதேசமயம் நியூயோர்க்கில் உருத்ரகுமாருடன் இணைந்து, சர்வதேசங்களில், மக்கள் மேல் நடத்தப்படும் அட்டூழியங்கள் நிறுத்தப்பட வேண்டும் என்ற மக்களின் போராட்டங்களையும் பெரிதுபடுத்தினார். அதன் ஒரு தொகுதியாகவே ஆஸ்திரேலியாத் தொடர்புகள் மூலமும் நாங்கள் அணுகப்பட்டோம். அங்குதான் பழைய பல்லவியான ஒற்றுமையீனம் மீண்டும் தலை தூக்கியது.

**334. எந்த விதத்தில், அது இந்த நேரத்தில் வந்தது?**

கே.பி. பற்றி நான் முன்னர், நோர்வே சமாதான காலங்களில் நடந்தவை பற்றிக் கூறியவை நினைவிருக்கலாம். மேல் நினைவுக்கு சுருக்கமாக கே.பி. பிரபாகரனின் ஆரம்ப கால நண்பன் அவரது திருமணத்தின் போது ஒரு தோழர் என்ற முறையில் பங்குபற்றியவர். 2002 வரையில் அவர் மேல் பல குற்றச்சாட்டுக்கள் வைக்கப்பட்டு, பிரபாகரன் அவரை இடைநிறுத்தக் கட்டாயப்படுத்தப்பட்டார். இவற்றில் பின்னணியில் இருந்தவர்களில் முக்கியமானவர்கள் தமிழ் செல்வனும், கஸ்ட்ரோவும். இடைப்பட்ட காலத்தில் கஸ்ட்ரோ, மண்ணிலிருந்தே சர்வதேச பொறுப்புகளைக் கவனித்துக் கொண்டிருந்தார். விசாரணைகளின் பின் கே.பியின் மேல் வைக்கப்பட்ட குற்றங்கள் நிரூபணமாகாவிட்டாலும், மனமுடைந்த கே.பி. தாமாகவே விலகி, ஒதுங்கி, வாழ்ந்தாலும் பிரபாகரனுடன் நட்புரிமையைப் பேணிக்கொண்டார்.

2007 போர் மீளத் தொடங்கிய காலங்களில், ஆயுத வரவுகள் தடைப்பட பிரபாகரன் 2008இல் கே.பியை அணுகி, விடுதலைப் புலிகளில் மீளச் சேர்ந்து கடமையாற்ற கேட்க, சில நிபந்தனைகள் கே.பியினால் வைக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டன. அதில் முக்கியத்துவமானது புலம்பெயர் தேசங்களின் விடுதலைப் புலிகளின் அமைப்புகள் யாவையும் கே.பியின் கட்டுப்பாட்டுக்குள் வரவேண்டும், அவரது கண்காணிப்பில் இயங்க வேண்டும் என்பது. கஸ்ட்ரோ சர்வதேசக் கிளைகளை மேற்பார்த்ததால் கே.பியை உள்ளடக்கச் சர்வதேச உறவுகள் துறை (International Relations Department ) என்பது உருவாக்கப்பட்டு அதற்கு கே.பி. தலைவராக்கப்பட்டார். கசப்பான ஓர் உண்மையை, நாசூக்காக, இப்படியான துறையை உருவாக்கித் தன்னிடம் தந்துள்ளார்கள், அதில் சர்வதேச அமைப்பாளர்கள், தனக்கு கீழ்தான் வருவார்கள் என கே.பி. நினைத்து நடந்தார். ஆனால், கஸ்ட்ரோ தனது அதிகாரத்தைக் கைவிட விரும்பவில்லை. அவர் தனக்கு இதுவரை விசுவாசமாக இருந்த அமைப்பாளர்களுக்கெல்லாம் கே.பியுடன் ஒத்துழைக்கத் தேவையில்லை எனப் பணித்தார். இதனால் ஒரு பனிப்போர் இருவருக்குமிடையே புலம்பெயரில் நடந்தது. ஆனால், கள நிலைகளினால் பிரபாகரனுக்கும் அதற்கு முக்கியத்துவம் கொடுக்க முடியவில்லை. அதற்குள் கே.பி. அரசியல் மட்டங்களில், தன்னுடன்இணைந்திருந்த உருத்திரகுமாரன் போன்றோருடன் வேலை செய்ய முடிந்ததே தவிர, புலம்பெயர் அமைப்பாளர்களிடையே, தெரியாதவரானார். இதற்கிடையில் கஸ்ட்ரோ, தனக்கான சர்வதேசப் பிரதிநிதியாக நோர்வேயில் இருந்த நெடியவனை நியமித்தார். புலம்பெயர் அமைப்பாளர்கள் அவரின் கீழ் இயங்கவேண்டும் எனப் பணிக்கப்பட்டது. நெடியவன் தமிழ் செல்வனுடன் நோர்வேயில் 4ஆம் கட்டப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றியவர். அதே சமயம் கடற் தளபதி சூசைக்கு நெருக்கமான குடும்பத்தில் மணமுடித்திருந்தார். பழைய போராளிகளுக்கு கே.பி. பரிச்சயமானவராயினும், புதியவர்கள் கஸ்ட்ரோ, நெடியவன் போன்றோரையே கூட அறிந்திருந்தார்கள். ஆகவே நெடியவனுக்கு நோர்வே மட்டத்திலும் இருந்த செல்வாக்கோடு கே.பியின் செயல்கள் முடக்கப்பட்டன. இந்தப் பனிப்போராட்டத்தின் அத்திபாரம், போருக்குப் பின், எஞ்சியருக்கக் கூடியதான விடுதலைப் புலிகளின் தலைமை, பொறுப்பாளர்கள் யார் என்பதிலும் தங்கியிருந்தது.

(வளரும்....)

# மீண்டும் மிதக்கும் டைட்டானிக்!

கிறிஸ்டி நல்லரெத்தினம் - மெல்பன்

'எங்கும் கும்மிருட்டு..... நடுநிசி..... 'கி....ரீ.... ரீ... ரீ...ச்' என எங்கோ யாரோ கூரிய நகங்களால் எதையோ பிறாண்டும் சத்தம்! அச்சத்தம் காதுகளில் புகுந்து முள்ளந்தண்டை சில்லிட்டது. படுக்கையில் இருந்து துள்ளி எழுந்து......

'என்ன, 'மர்மக்கதை மன்னன்' பி.டி.சாமியின் மர்ம நாவலில் இருந்து ஒரு பக்கத்தை படிக்கிறேன் என எண்ணினீர்களோ? '

அது தான் இல்லை!

ஏப்ரல் 14, 1912 இல் தன் கன்னிப் பயணத்தில் RMS டைட்டானிக் எனும் பாரிய பயணிகள் கப்பல் பனிப்பாறையுடன் உரசிய வேளையில் எழுந்த மரண ஒலி அது!

அது சரி, 109 வருடங்களுக்கு பின் இந்த நனவிடை தோய்தல் எதற்காம் என நீங்கள் கேட்பது புரிகிறது.

அதை பின்னர் சொல்லட்டுமா?

சரி, கதைக்கு வருவோம்.

ஏப்ரல் 10, 1912 இல் இங்கிலாந்தின் தென்கிழக்கில் அமைந்துள்ள சௌதாம்ப்டன் எனும் துறைமுகத்தில் இருந்து ஆயிரத்திற்கும் அதிகமான பயணிகளுடனும் 892 மாலுமிகளுடனும் தன் கன்னிப் பயணத்தை ஆரம்பித்தது 46,328 தொன் எடையுள்ள டைட்டானிக். அக்காலங்களில் இதுவே உலகின் மிகப் பெரிய பயணிகள் நீராவிக் கப்பல் என பெயர் பெற்றது.

ஏப்ரல், மே மாதங்கள் கடல் பயணங்களுக்கு பிரபலம் அல்லாததால் கப்பலின் மொத்த 2,453 பயணச்சீட்டுக்களில் பாதியே விற்பனையாகிற்று. மேலும் அந்நாள்களில் நடைபெற்றுக் கொண்டிருந்த தேசிய நிலக்கரி ஊழியர்களின் வேலை நிறுத்தமும் பயணிகளின் பயணத்தை பின்போட வைத்தது.

கப்பலின் முதலாம் வகுப்பில் பயணம் செய்த 325 பயணிகள் ஒருவருக்கு ஒரு வழிப் பயணத்திற்கு (இரு படுக்கை அறை) செலுத்திய தொகை $4,350. இது இன்றைய மதிப்பீட்டில் $50,000 ஐ தாண்டும் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

இவர்களுக்கென ஜிம், நீச்சல் தடாகம், வாசிகசாலை, உயர்தர உணவகங்கள் உட்பட பல சொகுசு வசதிகள் இருந்தன என்றால் சும்மாவா? ஆம், கோடீஸ்வரர்களின் சொர்க்கம்தான்!

மூன்றாம் வகுப்பில் அமெரிக்காவில் தமக்கென ஒரு நல்வாழ்வை அமைத்துக் கொள்ளும் கனவுடன் ஆமேனியா, இத்தாலி, சிரியா, சுவீடன் போன்ற நாடுகளில் இருந்து வந்த சமுதாயத்தின் கீழ்தட்டு மக்களே நிரம்பியிருந்தனர். இவ்வகுப்புப் பயணிகளுக்கு ஆடம்பரமான வசதிகள் இல்லாவிட்டாலும் அக்கால கட்டத்தில் இருந்த மூன்றாம் வகுப்பு வசதிகளை விட டைட்டானிக் மேலானதாகவே கட்டமைக்கப்பட்டிருந்தது.

பயணிகள் மட்டுமல்லாது பல தொன் பொதிகளையும் அதிலும் விசேடமாக பிரித்தானிய - அமெரிக்க தபால் பொதிகளையும் கடிதங்களையும் கனவுகளையும் கரைசேர்க்கும் கடமையையும் சுமந்து கொண்டு புறப்பட்டது அப்பாரிய கப்பல்.

ஏப்ரல் 10 ஆம் திகதி தன் பயணத்தை ஆரம்பித்த டைட்டானிக் ஆங்கில கால்வாயூடாக பிரான்ஸின் சேர் பூர்க்கையும் அயர்லாந்து குயீன்ஸ்டவுனையும் தொட்டு மேலும் பல பயணிகளையும் விழுங்கிக் கொண்டு 4,546 கி.மீ. தொலைவில் உள்ள நியூயோர்க் நோக்கி 2,224 பயணிகளுடன் தன் ஆறு நாள் பயணத்தை ஆரம்பித்தது.

'முதல் கோணல் முற்றும் கோணல்' எனும் முதுமொழிக்கிணங்க டைட்டானிக்கின் பயண ஆரம்பமே அபசகுணத்தில்தான் தொடங்கிற்று!


சௌதாம்ப்டன் துறைமுகத்தில் நிகழ்ந்த ஒரு சிறு அசம்பாவிதத்தில் இருந்து மயிரிழையில் தப்பியது டைட்டானிக்!

துறைமுகத்தில் தரித்து நின்ற SS நியூயோர்க் எனும் கப்பலுடன் டைட்டானிக் முத்தமிடுவதை தவிர்க்க அக் கப்பலை பாரிய கம்பிகளால் கட்டி வைக்கும் தேவை வந்தது. அகோர நீர் ததும்பல்களால் அக்கம்பிகள் ஒழ்ந்து தெறிக்க டைட்டானிக்கும் நியூயோர்க்கும் முட்டிக்கொள்ளும் ஆபத்து! டைட்டானிக்கின் கப்டன் எட்வர்ட் ஜோன் ஸ்மித் தன் சாதுரியத்தால் ஒரு பாரிய விபத்தை தவிர்க்கும் வண்ணம் இன்ஜினை முடுக்கி முழு வேகத்தில் செலுத்தி 'தாட்டு வெட்டி' கப்பலை காப்பாற்றினார்.

கப்பலின் இன்ஜின் அறையை அண்மித்த நிலக்கரி கிடங்குகளில் ஏற்பட்ட தீ வேறு பத்து நாள்கள் எரிந்து அணைந்த வேளை அது. இவற்றை விட வேறென்ன 'ஆசீர்வாதங்கள்' வேண்டுமாம்!?

இதற்கு எட்டு நாள்களுக்கு முன்னர் தான் டைட்டானிக்கின் வெள்ளோட்டம் பெல்பாஸ்டின் கப்பல் கட்டும் துறையை ஒட்டிய கடல்பரப்பில் நடைபெற்று முழு வெற்றியுடன் 'ஆல் பாஸ்' சான்றிதழை பெற்றிருந்தது. எனவே இந்த அனர்த்த தவிர்ப்புக் கப்பலில் தொழில்நுட்ப திறனுக்கு கிடைத்த வெற்றி. கப்டன் ஸ்மித்தின் ஆளுமைக்கு கிடைத்த வெற்றி!

ஆனால் இன்னும் சில நாள்களில் அவரின் வாழ்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க இருக்கும் ஒரு பெரிய ஆபத்து பனிப்பாறை வடிவில் காத்திருப்பதை அவர் உணரவில்லை. கப்பலை தாங்கிய திரவமே திண்மமாகி அதை அழித்த அவலம்!



கேப்டன் ஸ்மித் ஒன்றும் கற்றுக்குட்டி அல்ல. கப்பலின் உரிமையாளர்களான வைற் ஸ்டார் லைன் கம்பனியின் மிக மூத்தகப்டன் அவர். தன் 62 வயதில் நாற்பது வருடசேவையை பூர்த்தி செய்த ஜாம்பவான். ஆனால், அவரின் கீழ் வேலை செய்த அனேக மாலுமிகள்மிகக் குறைந்த கப்பல் வேலை அனுபவம் உள்ள தற்காலிக தொழிலாளர்கள் என்பது உண்மை. கப்பல் வேறு புதிது.



அதனால் என்ன, எழுதிச் செல்லும் விதியின் கையின் பாதையை யார்தான் மாற்ற முடியும்?

டைட்டானிக்கின் முதல் மூன்று நாள் பயணம் எவ்வித அசம்பாவிதங்களும் இன்றி இனிதே கழிந்தன. தினமும் சராசரியாக 850 கி.மீ. தூரத்தை மணிக்கு 44 கி.மீ. வேகத்தில் கடந்து சென்றது கப்பல். ஆரம்பத்தில் பாரிய அலைகளை எதிர்நோக்கினாலும் போகப்போக கடல் அமைதியான நதிபோலானது. குளிரும் பனி மூட்டமும் மெதுவாய் கடல் மேல் படரத் தொடங்கிறது.

ஏப்ரல் 14 மதியம்: டைட்டானிக்கு முன் சென்ற RMS கறோணியா, RMS பல்டிக் கப்பல்கள் எதிரே பாரிய பனிப்பாறைகள் கடலில் மிதப்பதாயும் கவனமுடன் வரும்படியும் வானொலி சமிக்கைகளை அனுப்பின. கப்டன் ஸ்மித், இச் செய்திகள் கிடைக்கப்பெற்றதை உறுதிப்படுத்தி பதில் சமிக்கைகள் அனுப்பியதுடன் கப்பலின் பாதையில் சிறு மாற்றத்தை செய்து




தெற்கு பக்கமாய் கப்பலை செலுத்த ஆணையிட்டார்.

நாழிகைகள் நத்தையாய் நகர்கின்றன.....

ஆதவன் அஸ்தமித்து எங்கும் இருள் சூழ்ந்த நேரம்... கடல் மீது குளிர் மேகம் படிந்து ஒரு மாயான அமைதி...... பயணிகள் இரவு போசனத்தை முடித்து தூங்கத் தயாராகும் வேளை. பல முதல் வகுப்பு பயணிகள் கப்பலின் மேல் தளத்தில் கூடி சல்லாபித்து பாண்ட் இசையை கண்மூடி ரசிக்கும் நேரம்.

இரவு மணி 9:40 - வானொலி சமிக்கை அறையில் SS அமெரிக்கா மற்றும் SS கலிபோனியன் கப்பல்களில் இருந்து வந்த இரு அவசர செய்திகள் சமிக்கை நாடாவில் நடனமாடி பதிவேற்றப்படுகின்றன. 'பனிப்பாறைகளை கடந்து செல்கிறோம். பாறை வயல்கள் இவை. கவனம்!'

'மூன்று மிகப் பெரிய பனிப்பாறைகளை கடக்கின்றோம். கவனம்!'

வந்த செய்திகள் கப்டனுக்கு வந்தடையவில்லை. இச்செய்திகளின் தாற்பரியம் அவ்வேளையில் புறக்கணிக்கப்பட்டு பயணிகளுக்கு வந்த சமிக்கை செய்திகளை கொண்டு சேர்ப்பதில் சமிக்கை ஆபீசர்கள் முன்னுரிமை வழங்கி செயல்படுகின்றனர்.

இரவு 11.30: பனிப்பாறைகள் பனிமூட்டத்தில் தோன்றி கப்பலை தாண்டி சாதுவாக கடந்து செல்கின்றன. ஏதோ காரணத்தினால் கப்டன் ஸ்மித்தின் கப்பலின் வேகம் குறைக்கப்படாமல் மணிக்கு 41 கி.மீ. வேகத்திலேயே பயணிக்கிறது. முன்னால் செல்லும் கப்பல்களில் இருந்து டைட்டானிக்குக்கு பனிப்பாறை எச்சரிக்கை சமிக்கைகள் வந்த வண்ணம் இருக்கின்றன.

இரவு 11.39: டைட்டானிக்கு எமனாய் வந்த ஒரு பாரிய பனிப்பாறை கப்பலின் முற்பகுதியில் நின்ற கண்காணிப்பு ஆபீசரின் கண்களுக்கு எட்டுகிறது. அபாய மணியை மூன்று முறை பலமாக அடித்து சமிக்கை தொலைபேசியில் தன் கண் முன் காண்பதை விபரிக்கிறார்.

கப்டனிடம் இருந்து கப்பலை உடனடியாக திசை திருப்பி பாறையை தவிர்க்கும் ஆணைகள் பிறக்கின்றன.

இயந்திரங்கள் பெருமூச்சுடன் எதிர்புறம் சுழலுகின்றன. இன்ஜின் தளத்தில் எங்கும் நீராவியும் நிலக்கரி புகையும் மூக்கை அடைக்கின்றன. வேகத்தை குறைத்து பாறையை தவிர்த்து தடவிச் செல்லத்தான் இந்த முயற்சி.

டைட்டானிக் பனிப்பாறையை தவிர்ப்பதில் பாதி வெற்றி அடைந்தாலும் நீருக்கடியில் நீட்டிக் கொண்டிருந்த கூரிய பனிப்பாறை கப்பலின் வயிற்றை கிழித்து கடல் நீருக்கு ஒரு முகத்துவாரத்தை அமைத்துக் கொடுக்கின்றன.

கப்பலின் உள்ளே கடல் நீர் கொட்டி ஆறாக ஓடி தளங்களை நிரப்பத்தொடங்குகிறது. பத்து மாடிகள் கொண்ட கப்பலின் தளங்கள் ஒவ்வொன்றாய் உப்பு நீரில் நனைகின்றன. கதவுகள் தட்டப்பட்டு தூங்கும் பயணிகளை எழுப்பும் முயற்சிகள் ஆரம்பம்!

(மிகுதி நாளை)

# கோணமலை காளி ஆச்சி தரிசிப்போம் வாரீர்!

- வே.வரதசுந்தரம் -

23



சந்தனகாப்பு சாத்துபடியில்
கோணமலை காளிஆச்சி

**குணக்குன்றாம் மகளிர்**
**கூப்பினர் கரங்கள்**
**மணவாழ்வு தாராய்**
**ஆச்சிநீ காளி!**
**வாழும் வயதினில்**
**வரனின்றி வாடுறார்**
**இது தகுமோ! இது தகுமோ!**
**ஆச்சி நீ காளி!**

சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசா திடீரென அண்மையில் காலமான துணுக்குறும் செய்தி கேட்டதும், என்மனத்தில் அவரது இறைபக்தியும், அன்னார் அனுபவித்த திருகோணமலை பத்திரகாளி அம்பாளின் அற்புதமும் நினைவலையாகத் தோன்றுகின்றன.

அவர் அளவெட்டி மண்ணின் மங்கை, சட்டத்துறையில் புகழ்பூத்த மூத்தபெண் வழக்கறிஞர். ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவின் வாழ்க்கைத் துணைவி.

பல வழக்கறிஞர்கள் அரசியல் சூழல் காரணமாக ஆஜராகத் தயங்கிய சர்ச்சைக்குரிய வழக்குகளைக் கூட, வழக்கறிஞர் கௌரிசங்கரி தன் கட்சிக்காரர்களுக்கு நீதிகிட்ட வேண்டும் என்பதற்காகத் துணிச்சலுடன், திறமையாகக் கையாண்டவர். உறுதிமிக்க நெஞ்சம், சட்டநுட்பம் தெரிந்த மூளை, வழக்கின் தன்மை அறிந்து அதற்கேற்ப சிரேஷ்ட வழக்கறிஞர்களை வாதாட ஏற்பாடுசெய்யும் சாமர்த்தியம், அவர்களுடனான சட்டஆலோசனைக் கூட்டங்களில் வழக்கு சம்பந்தமான முக்கிய குறிப்புகளைக் குறிப்பிடும் திறமை, எல்லாவற்றுக்கும் மேலாக காலை தொட்டு இரவு வேளைவரை தன்கட்சிக்காரர்களுக்காக ஓய்வின்றி உழைத்தல், சகவழக்கறிஞர் அனைவருடனும் நல்லுறவுபேணல், சமூகசேவை செய்யவேண்டும் என்னும் உந்துதல் என்பன அன்னாரின் ஆளுமை.

நாட்டில் சட்டவாட்சியை உறுதிப்படுத்த வேண்டி அடிப்படை உரிமை மனுக்கள், ஆள்கொணர்வு மனுக்கள் ஆகியவற்றை நீதிமன்றில் தாக்கல் செய்து, வழக்குகளை நடாத்திய சட்டத்தரணி அவர். இப்படியெல்லாம் அவர் சாதனைகள் படைத்தமைக்கு அன்னாரின் துணைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசாவின் பரிபூரண ஒத்துழைப்பு, ஆலோசனை துணையாக இருந்தது எனலாம். அத்துடன் அவர் மகாஜனக் கல்லூரியில் கல்வி பயின்றமை, கொழும்பு பல்கலைக்கல்லூரியில் பட்டதாரிப் பட்டம் பெற்றமை, கொழும்பு சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்று வழக்கறிஞரானமை அவர் செயற்பாடுகளுக்குப் பின்புலமாக அமைந்தன எனலாம்.

ஐலண்ட் ஆங்கிலப் பத்திரிகை நீதிமன்ற நிருபராக கொழும்பு நீதிமன்றங்களில், உயர்நீதிமன்றங்களில், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில், உயர்நீதிமன்றத்தில் செய்திகள் சேகரித்த வேளைகளில் அன்னாரின் இத்திறமைகளைக் கண்டு வியந்திருக்கின்றேன்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் உதயன் பத்திரிகையின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரும், அதனை நெருக்கடி காலத்தில் பல பாரிய சவால்களை முகங்கொடுத்து, தன்னுயிரைத் துச்சமாக மதித்து, நெஞ்சுரத்துடன் ஆற்றுப்படுத்திய பிரபல மூத்த பத்திரிகையாளருமான எனது மைத்துனர் வித்தியாதரன் நடேசபிள்ளை பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின்கீழ் கைதாகியிருந்த வேளை. அவர் மனைவி, அவர் சகோதரி, உதயன் பத்திரிகை நிர்வாக முகாமையாளர் ஆகியோர் சட்ட ஆலோசனை வேண்டி சட்டமேதையான வழக்கறிஞர் சுமந்திரனை நாடிய வேளை, கௌரிசங்கரியும் கலந்துகொண்டமையை நன்றியுடன் நினைவு கூர்கிறேன்.

பல்லாண்டுகளுக்கு முன்னர் திருகோணமலை அருள்மிகு பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான ஆதீன கர்த்தா வேதாகமாமணி பிரம்மஸ்ரீ ரவிச்சந்திர குருக்கள் ஆலய குடமுழுக்கு நிதிசேகரிப்புக்காக கொழும்பு வந்த வேளை, குருக்கள் ஐயா அவர்களை வழக்கறிஞர் கௌரிசங்கரியின் இல்லத்துக்கு நானும், என் துணைவி வில்வராணியும் அழைத்துச் சென்றோம். குருக்கள் ஐயாவை பண்புடன் வரவேற்று எங்கள் கோரிக்கையை நிறைவேற்றிய அவர், குருக்கள் ஐயாவுடன் சமய சம்பந்தமான ஆன்மீக சம்பாஷனையில் ஈடுபட்டார். அம்பாளைப் பற்றியும், காளிகோயில் பற்றியும் பயன்தரும் விடயங்களைக் கேட்டறிந்து கொண்டார்.

வழக்கறிஞர் கௌரிசங்கரியுடன் இத்துணை நீண்ட காலம் பழக்கமிருந்த போதிலும், அன்றுதான் அன்னாரின் உள்ளக்கிடக்கையை, அவரது இறைநாட்டத்தை, பக்தியை அறிந்து கொண்டேன். அவரது சாதனைகள் அனைத்துக்கும் அடிநாதம் இறைபக்தி, இறைநம்பிக்கை என்று தெளிந்தேன்.

என்துணைவியார் வில்வராணி தொகுத்த அம்பாள் பாடல்களை நூலாக சிவகாமி அம்மா பப்ளிகேஷன், சென்னை மணிமேகலைப் பிரசுரமாக வெளியிட்டது. 2005 ஜனவரி மாதம் 18ஆம் திகதி திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலய இலட்சார்ச்சனை பூஜையின்போது அரங்கேற்றப்பட்டது. அந்நூலுக்கு வழக்கறிஞர் கௌரிசங்கரி வழங்கிய பின்வரும் முன்னுரையில் அவர் உள்ளக்கிடக்கையை, இறைபக்தியை, இறைநாட்டத்தைக் காண்கிறோம்:-

'பிரார்த்தனை மனிதனுக்கு ஆறுதலை, மனச்சாந்தியினைத் தருவது. உலகியலில் அலமந்து நிற்கும் மக்களுக்கு இறைவழிபாடு ஓர் ஊன்றுகோலாகும்.

மனம், வாக்கு, காயம் மூன்றும் இணைந்து செய்வது வழிபாடாகும். இறைசக்தி வாய்ந்த நிறைமொழி மாந்தர் பாடிய பாக்கள் நெஞ்சினை உருக்கும் வழிபாட்டுக்கு அவசியமாகும்.

அம்பாள்மீது அருளாளர்கள் பாடிய பக்திப் பாடல்களைத் தொகுத்துத் தந்துள்ளார். அம்பாள் பக்தை வில்வராணி வரதசுந்தரம். அம்பாள் உபாசகர்களுக்கு ஆற்றிய அருந்தொண்டு இதுவாகும். அன்னாருக்கு அம்பாள் அருள் கிட்டுமாக.!'



கோணமலை காளிஆச்சி
பக்தை கௌரிசங்கரி

திருகோணமலை மண்ணின் மைந்தன் பிரபல புகைப்படக் கலைஞர் அருளாளர் நாகராசா கணபதிப்பிள்ளை பிடித்த அழகிய, சந்தனக் காப்பில் அம்பாள் தோற்றமளிக்கும் படத்தை சிவகாமி அம்மா பப்ளிகேஷன்ஸ் வெளியிட்டு இலவசமாக வழங்கியபோது அவற்றின் இரண்டு படங்களை வழக்கறிஞர் கௌரிசங்கரியிடமும் கையளித்தேன்.

சிலமாதங்கள் உருண்டோடின. அதன் பின்னர் அவரையான் கொழும்பு நீதிமன்ற வளாகத்தில் சந்தித்தபோது, அவர்கூறியது கேட்டு மெய்சிலிர்த்துப் போனேன். அப்படி என்னதான் அவர் சொன்னார். இதோ:-

'வரதசுந்தரம்! அண்மையில் என்தாயார் சுகவீனம் உற்றார். நோயால் நலிவுற்றார். நித்திரை கொள்ளாமல் இருந்தார். இது கண்டு நாம் கலங்கிப் போனோம். அவ்வேளை அம்பாள் சிந்தனை என் மனதில் துளிர்த்தது. நீங்கள் வழங்கிய திருகோணமலை பத்திரகாளி அம்பாள் படத்தை எடுத்து, கண்ணில் ஒற்றி விட்டு, அம்மாவின் தலையணையின் கீழ் வைத்தேன். அவர் நெற்றியில் திருநீறு அணிந்தேன். அவர் அருகில் இருந்தவாறு அம்பாள் பாடல்களை பயபக்தியுடன் ஓதினேன்.

என்ன அதிசயம்! உடனேயே அம்மா நித்திரையானார். சிலநாள்களில் அம்மா குணமடைந்தார். எமக்கும் நிம்மதி ஏற்பட்டது!'

காளி ஆச்சி என்னே நின்கருணை!

# குறை பிரசவத்தில் பிறந்த சிசுவை மண்ணில் புதைத்தார் இளம் தாய்!

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கெலேகால, லோவர் கிப்ஸன் வீதியில் உள்ள வீடொன்றுக்கு அருகில் புதைக்கப்பட்டிருந்த சிசுவின் சடலமொன்று, தோண்டி எடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி லுசாகாகுமாரி தர்மகீர்த்தியின் உத்தரவுக்கு அமைய, நுவரெலியா பொலிஸாரால் நீதிபதி முன்னிலையில் சிசுவின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது. ஆறுமாதம் குறை பிரசவத்தில் பிறந்த சிசுவே, இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

கெலேகால, லோவர் கிப்ஸன் பகுதியில் குடும்பத்துடன் வசித்த 25 வயதுடைய திருமணம் முடிக்காத யுவதி ஒருவரே ஆறு மாதக் கர்ப்பிணியாகியுள்ள நிலையில், வீட்டாரின் நிர்ப்பந்தத்தில் கருக் கலைப்பு மருந்தை உட்கொண்ட யுவதி வீட்டிலேயே குறை மாதத்தில் சிசுவை பிரசவித்துள்ளார்.

இவ்வாறு பிரசவித்த குழந்தையை வீட்டுக்கு அருகில் உள்ள மின்கம்பம் ஒன்றுக்கு அருகில் புதைத்துள்ளனர்.

அதே நேரத்தில் சிசுவை பிரசவித்த தாய்க்கு இரத்த போக்கு அதிகரித்து பாதிக்கப்பட்ட நிலையில் அவரை நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர்.

இதன்போது குறித்த யுவதி தான் குறை மாதத்தில் சிசு ஒன்றை பிரசவித்து சிசு இறந்த நிலையில் அதை வீட்டார் புதைத்த சம்பவத்தைத் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, வைத்தியர்கள் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலை பொலிஸாருக்கு முறையிட்டுள்ளமையுடன், யுவதியின் வாக்குமூலத்தை பெற்று இது விடயமாக நுவரெலியா நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளனர்.

இதையடுத்து, சிசு புதைக்கப்பட்ட இடத்தைஅடையாளம்கண்டுஇரத்தக்கறையுடன் துணி ஒன்றில் சுற்றி புதைக்கப்பட்ட நிலையில் சடலம் தோண்டி எடுக்கப்பட்டது.

இதையடுத்து சடலம் பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல நீதிவான் பொலிஸாருக்கு அனுமதி வழங்கியுள்ளார்.



மேலும் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய நுவரெலியா பொலிஸாருக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## யாழ்.பல்கலைக்கழகத்தில்

# மனித உயிரியல் விஞ்ஞானத்துறையை ஸ்தாபிக்க அனுமதித்தது ஆணைக்குழு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தில் நான்காவது புதிய துறையாக மனித உயிரியல் விஞ்ஞானத்துறை உள்வாங்கப்படவுள்ளது. இதற்கான அனுமதியைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வழங்கியுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மூதவையின் பரிந்துரையுடன், பல்கலைக்கழக பேரவையின் அங்கீகாரத்துடன் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தரால் சமர்பிக்கப்பட்ட முன்மொழிவு கடந்த மாதம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தர நிர்ணயக் குழு மற்றும் முகாமைத்துவக் குழு ஆகியவற்றால் ஏற்றுக்கொள்ளப்பட்டதை அடுத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இந்தத் தீர்மானமும், யாழ். பல்கலைக்கழகத்தின் மனித உயிரியல் விஞ்ஞானத்துறைக்கான முன்மொழிவு அறிக்கையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின், வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்படும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# தொற்றைத் தடுக்க மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம்

## யாழ்.மாவட்ட அரச அதிபர் கோரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது. இதைக் கட்டுப்படுத்த பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும்.

– இவ்வாறு யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மிக விரைவாகவும் அமைதியான முறையிலும் யாழ். மாவட்டத்தில் இரண்டாம் கட்டத் தடுப்பூசி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் பொதுமக்கள் அனைவரும் தமது இரண்டாம் கட்டத் தடுப்பூசிகளைத் தாமதிக்காது அடுத்த ஓரிரு நாட்களுக்குள் பெற்று கொரோனாத் தொற்றுத் தாக்கத்திலிருந்து தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குக் கொரோனாத் தொற்று ஏற்படக்கூடிய சூழ்நிலை அதிகமாகக் காணப்படுவதால் எவ்வித தயக்கமின்றி இந்தத் தடுப்பூசி விடயம் தொடர்பில் அரசு மற்றும் சுகாதாரத் தரப்பினர் விடுத்துள்ள அறிவுறுத்தல்களுக்கமைய உரிய தடுப்பூசி செலுத்தப்படும் மையங்களுக்குச் சென்று அடுத்து வரும் நாள்களில் விரைவாகத் தமது தடுப்பூசியைப் பெற்று கொரோனாத் தொற்றிலிருந்து தம்மையும் சமூகத்தையும் பாதுகாக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் – என்றார்.

# இந்திய மீனவர்களின் படகை மறித்து சிங்கள மீனவர்கள் பெரும் அட்டகாசம்

## பொருள்களும் பணமும் கொள்ளை

(ந.லோகதயாளன்)

இந்தியாவின் கோடியாக்கரையில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்களின் படகை மடக்கிய இரு மீன்பிடிப் படகில் வந்த இலங்கை மீனவர்கள் எனச் சந்தேகிக்கப்படுவோரால் பொருட்களும் பணமும் கொள்ளையிடப்பட்டன என்று தமிழக மீனவர்கள் குற்றஞ்சாட்டினர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

கோடியாக் கரையில் இருந்து மீன்பிடிக்கப் புறப்பட்ட ஓர் படகு கரையில் இருந்து 30 நோட்டிக்கல் கடல் மைல் தொலைவில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த வேளை இலங்கைத் திசையில் இருந்து இரு படகுகளில் வந்த ஆறு மீனவர்கள் எமது படகை வழி மறித்து கத்தி மற்றும் வாள் சகிதம் எமது படகுக்குத் தாவினர்.

இவ்வாறு தாவியவர்கள் எம்மை அச்சுறுத்தி எமது படகில் இருந்த வாக்கிடோக்கி, ஜி.பி.எஸ், பற்றறி, இன்வெக்றர், கைத்தொலைபேசி மற்றும் ஒரு தொகைப் பணம் ஆகியவற்றைக் கொள்ளையிட்டனர். இதன்போது இதனை எம்மில் ஒருவர் இரகசியமாக புகைப்படம் எடுக்க முனைந்த வேளை புகைப்படம் எடுத்தவரைக் கடலில் தள்ளி வீழ்த்தினர். இதனால் சிறிது நேரம் நீந்தி வலையைப் பற்றிப் பிடித்து மீண்டும் படகில் ஏறிக்கொண்டார்.

இதன்போது எம்மை அச்சுறுத்திக் கொள்ளையிட்டவர்கள் சிங்கள மொழியிலேயே உரையாடினர். இதனால் எம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை – என்றனர்.

## யாழில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற நெடுந்தீவைச் சேர்ந்த 70 வயதுடைய ஆண் ஒருவரும், பருத்தித்துறையைச் சேர்ந்த 72 வயதுடைய ஆண் ஒருவரும், கந்தர்மடத்தைச் சேர்ந்த 79 வயதுடைய ஆண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

அல்வாயைச் சேர்ந்த 75 வயதுடைய ஆண் ஒருவர் மந்திகை ஆதார மருத்துவமனையின் கொரோனா சிகிச்சை விடுதியில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

தெல்லிப்பழை மருத்துவமனையில் ஒருவரின் சடலம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதேவேளை, சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இளம் ஊடகவியலாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 265ஆக உயர்வடைந்துள்ளது.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்றிரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் 159 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் தொற்றாளர்களைக் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும் அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப் படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## போதனா பணிப்பாள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொரோனா பேரிடரினைக் கருத்தில் கொண்டு வைத்தியர் தங்கமுத்து சத்தியமூர்த்தி இன்று மீண்டும் பொறுப்பேற்கின்றார்.

பிரிட்டனில் மேற்படிப்புக்காக கடந்த பெப்ரவரி ஆரம்பித்தில் சென்றிருந்த அவர், தனது பொறுப்பை தற்காலிகமாகப் பதில் பணிப்பாளர் வைத்தியர் எஸ். ஸ்ரீபவானந்தராஜாவிடம் ஒப்படைத்திருந்தார்.

எனினும், தற்போது விடுமுறையில் நாடு திரும்பிய வைத்தியர் தங்கமுத்து சத்தியமூர்த்தியை பணிப்பாளர் பொறுப்பை ஏற்க சுகாதார அமைச்சு கேட்டுக்கொண்டது.

அதற்கமைய அவர் தனது மேற்படிப்பை பிற்போட்டு இன்று காலை 8 மணிக்கு தனது கடமைகளை மீளப் பொறுப்பேற்கவுள்ளார்.

## நேற்று சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதையடுத்து நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 9 ஆயிரத்து 604 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்தவர்களில் 95 பெண்களும், 109 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதில் ஆண்கள் மூவரும், பெண்கள் இருவரும் என 05 பேர் 30 வயதுக்குட்பட்டவர்களாவர். 30 ஆண்கள், 20 பெண்கள் என 50 பேர் 30 – 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 149 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 76 ஆண்களும், 73 பெண்களும் அடங்குகின்றனர்.

இதேவேளை, இலங்கையில் நேற்று 3 ஆயிரத்து 619 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 47 ஆயிரத்து 749 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,952 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 78 ஆயிரத்து 168 ஆக உயர்வடைந்துள்ளது.

## இளம் ஊடகவியலா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வழங்கியமைக்காகவும் மாமனிதர் ரவிராஜ் ஞாபகார்த்த நினைவு விருதைப் பெற்றவராவார்.

தனக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது எனவும், தான் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார் எனவும் நேற்றுமுன்தினம் அவர் தனது ருவிட்டர் தளத்திலும், பேஸ்புக்கிலும் அறிவித்திருந்தார்.

நேற்று அவருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டது எனவும், சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது அவர் உயிரிழந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, மாற்றுவலுவுடைய ஞானப்பிரகாசம் பிரகாஷ் தன்னுடைய உடலை யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்துக்கு வழங்குவதற்கு ஏற்கனவே கோரிக்கை விடுத்துள்ளமை தொடர்பான ஆவணம் வெளியாகியுள்ளது.

எனினும், கொரோனாவால் உயிரிழந்த அவரின் உடலை அவரின் விருப்பத்துக்கேற்ப கையளிக்க முடியாது என்பதே தற்போதை காலத்தின் நிலை என்பது குறிப்பிடத்தக்கது.

## கோட்டாவின் அவசர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தற்போதைய கொரோனா வைரஸ் தொற்றுப்பரவல் நிலைமைக்கு மத்தியில் நாடாளுமன்ற அமர்வுகளைக் கூட்டுவதா என்பது குறித்து ஆராயும் விதமாக நாடாளுமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நேற்று காலை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ள நிலையில் சபை அமர்வுகளைக் கூட்டுவது குறித்து ஆராயப்பட்ட நிலையில் ஏற்கனவே தீர்மானிக்கப் பட்டதன் பிரகாரம் எதிர்வரும் திங்கட்கிழமை விசேட நாடாளுமன்ற அமர்வுகளைக் கூட்டுவதென்ற தீர்மானம் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது.

எனினும், எதிர்வரும் 6ஆம் திகதி கூடும் நாடாளுமன்ற அமர்வுகளின்போது இதற்கு முன்னர் பல்வேறு காரணங்களுக்காக விடுபட்ட ஆளும் – எதிரணி உறுப்பினர்களின் கேள்விகளை எடுத்துக்கொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டதுடன், 7ஆம் திகதி சபை அமர்வுகளின் போது ஜனாதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டம் மற்றும் அத்தியாவசிய பொதுச் சேவை சட்டத்தின் கீழான கட்டளை, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்ட மூலம், உற்பத்தி வரி (விசே ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான கட்டளைகள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி(கட்டுப்பாடு) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

எனினும், இதற்கு எதிர்க்கட்சியினர் இணங்கவில்லை. அவசரகாலச் சட்டத்தை முழுநாள் விவாதமாக முன்னெடுக்க வேண்டும் எனவும், எனவே அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் வலியுறுத்தினார். இதற்கு ஆளும் தரப்பினர் இணக்கம் தெரிவித்தனர். அதற்கமைய எதிர்வரும் 06ஆம் திகதி திங்கட்கிழமை முழு நாளும் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக மாத்திரம் ஒதுக்குவதற்கு இதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தபோதும், குறித்த கேள்விகளைப் பிறிதொரு தினத்தில் எடுத்துக்கொள்ளவும், பொதுமக்கள் பாதுகாப்புக்கட்டளைச் சட்டத்தின் 02வது பிரிவினால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய அத்தியாவசிய உணவுப் பொருள்களை வழங்குவதற்காக இந்த அவசரகாலச் சட்ட ஒழுங்குவிதி மீதான முழுநாள் விவாதத்தை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

அதேபோல் எதிர்வரும் 07ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நாடாளுமன்றம் கூடவிருப்பதுடன் முற்பகல் 11 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை 1979ஆம் ஆண்டு 61ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவை சட்டத்தின் கீழான கட்டளை, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டமூலம், உற்பத்தி வரி (விசே ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான கட்டளைகள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாடு) சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் என்பன விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

இதனைத் தொடர்ந்து பிற்பகல் 4.30 மணி முதல் 4.50 மணிவரை சபை ஒத்தி வைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதுடன் பிற்பகல் 4.50 மணி முதல் பிற்பகல் 5.30 மணிவரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான விவாதம் நடைபெறும்.

## அரிசி, சீனிக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பொதி செய்யப்பட்ட சீனியின் விலை 125 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, கீரிச் சம்பா ஒரு கிலோகிராமின் சில்லறை விலை 125 ரூபாவாகவும், சம்பா ஒரு கிலோகிராம் 103 ரூபாவாகவும், நாட்டரிசி ஒரு கிலோகிராம் 98 ரூபாவாகவும், வெள்ளை பச்சை அரிசி ஒரு கிலோகிராம் 95 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# வட இலங்கையில் ஆழமாக கால் பதிக்கின்றது சீனா!

## கவலையில் இந்தியா

வடக்கு இலங்கையின் உள்கட்டமைப்புத் திட்டங்களில், சீனா தனது கால் தடத்தை விரிவுபடுத்துவதற்கான புதிய முயற்சிகளின் மீது இந்தியா கவலை கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்திய ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனா தனது கடன் கொள்கைகளின் மூலம் ஏற்கனவே இலங்கைக்குள் ஆழமான மூலோபாய ஊடுருவல்களைச் செய்துள்ளது.

தற்போது தீவு தேசத்தில் முடிந்த வரை இந்தியக் கடற்கரைக்கு அருகில் தனது இருப்பை நிலைநிறுத்துவதற்கு உறுதியுடன் செயற்படுகிறது என்று இந்தியப் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

சீனப் பொருளாதார செயல்பாடு மற்றும் இலங்கையின் வடக்கு மாகாணத்தில் உத்தேசிக்கப்பட்ட உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள், பின்னர் மூலோபாய காரணங்களுக்காக சுரண்டப்படலாம், இது நிச்சயமாக இந்தியாவுக்கு கவலை அளிக்கிறது. - என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

முன்னதாக, சீனத் திட்டங்கள் பெரும்பாலும் தென்னிலங்கைக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் இப்போது வட இலங்கையிலும் பல சீன முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றது.

இது தொடர்பாக இந்தியா உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு பெப்ரவரியில் யாழ்ப்பாண தீபகற்பத்தில் உள்ள மூன்று தீவுகளில் சீன நிறுவனம் ஒன்றுக்கு காற்று மற்றும் சூரிய ஆற்றல் திட்டத்தை வழங்கும் இலங்கையின் முடிவுக்கு இந்தியா ஏற்கனவே எதிர்ப்புத் தெரிவித்திருந்தது.

உள்ளூர் வாசிகளின் எதிர்ப்புகளை மீறி, மற்றொரு சீன கூட்டு முயற்சியான, கடல் அட்டைகளை வளர்ப்பதற்காக, வட இலங்கையின் ஒரு கடலோரக் கிராமத்தில் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் இதுபோன்ற பல ஊடுருவல்கள் காணப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானுடன் இணைந்து கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை அபிவிருத்தி செய்வதற்கான முத்தரப்பு உடன்படிக்கையில் இருந்து பின்வாங்கியமையை அடுத்து இலங்கை மீது இந்தியா தொடர்ந்து வருத்தத்தில் உள்ளது.

எவ்வாறாயினும், அம்பாந்தோட்டை துறைமுகத்தின் 99 வருட குத்தகை முதல் கொழும்பு துறைமுக நகரத் திட்டம் வரை, தீவு நாட்டில் சீனா சுமுகமாகப் பயணிக்கிறது.

இலங்கையைத் தவிர, சீஷெல்ஸ், மொரிஷியஸ், மாலைதீவு, பங்களாதேஷ், மியன்மார் மற்றும் கிழக்கு ஆபிரிக்க நாடுகளுடன் கடல்சார் இணைப்புகளை ஏற்படுத்தி, முழு இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்திலும் சீனா தனது ஆதிக்கத்தைப் பரப்பி வருகின்றது என அந்த செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

# பாம்பின் விஷத்தில் இருந்து கொவிட் தொற்றுக்கு மருந்து!

## வெளியாகியுள்ள அறிவிப்பு

பாம்பு விஷத்திலிருந்து கொவிட் தொற்றுக்கு மருந்து கண்டுபிடிக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். சர்வதேச ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாம்பு விஷத்தில் இருந்து கொவிட் தொற்றுக்கு எதிராக மருந்தை உருவாக்கும் முயற்சியில் பிரேஸில் ஆராய்ச்சியாளர்கள் ஈடுபட்டுள்ளனர் என அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

ஒரு வகை பாம்பின் விஷத்தில் உள்ள மூலக்கூறு மூலம் குரங்குகளுக்கு பரிசோதனை செய்ததில் குரங்கு செல்களில் கொவிட் வைரஸ் இனப்பெருக்கம் செய்வதை கட்டுப்படுத்துகின்றது என்பது தெரிய வந்துள்ளது.

பாம்பு விஷத்தின் இந்த மூலக்கூறு கொரோனா வைரஸில் இருந்து மிக முக்கியமான புரதத்தை தடுக்கிறது என்று சாவ்பாலோ பல்கலைக் கழக பேராசிரியரும், ஆய்வின் ஆராய்ச்சியாளருமான ரபேல் கைடோ தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், முதல்கட்ட ஆய்வுக்கு பிறகு ஆராய்ச்சியாளர்கள் அடுத்ததாக மூலக்கூறின் வெவ்வேறு அளவுகளின் செயல்திறனை மதிப்பீடு செய்கிறார்கள் என அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மிகவும் ஆபத்தான பகுதியாக கொழும்பு!

## நிபுணர் ஒருவர் எச்சரிக்கை

டெல்டா மாறுபாடு காரணமாக கொழும்பின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் நோயாளிகள் அடையாளம் காணப்படுகின்றனர்.

அநேகமான மக்கள் பாதிக்கப்படுவதையே நாங்கள் பார்க்கின்றோம், என கொழும்பு மாநகரசபையின் தொற்றுநோயியல் நிபுணர் டினுகுருகே தெரிவித்துள்ளார்.

டெல்டா மாறுபாடு காரணமாக கொழும்பின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் நோயாளிகள் அடையாளம் காணப்படுகின்றனர் எனத் தெரிவித்துள்ள அவர், சோதனைக்கு உட்படுத்தப்படுபவர்களில் அநேகமானவர்கள் நோயாளிகளாக அடையாளம் காணப்படுகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

அநேகமான மக்கள் பாதிக்கப்படுவதையே நாங்கள் பார்க்கின்றோம், குறிப்பாக தொழில்களுக்குச் செல்லும் நடுத்தர வயதினர் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர் எனவும் டினுகுருகே தெரிவித்துள்ளார்.

ஒருவர் அவ்வாறான சூழ்நிலையில் வெளியில் சென்று நோயாளியானால் முழுக்குடும்பமும் பாதிக்கப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். தற்போது நாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினை இதுவே எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி செலுத்திக்கொண்ட பலருக்கு அறிகுறிகள் காணப்படுகின்றன. ஆனால் அவை ஆபத்தான நிலைக்கு இட்டுச்செல்வதில்லை எனத் தெரிவித்துள்ள தினுகுருகே, இதன் காரணமாகவே முடக்கல் நிலையின் போதும் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தன எனவும் தெரிவித்துள்ளார்.

தற்போது மிக அதிகளவு பரவல் காணப்படுகின்றது. நாங்கள் இதனைக் கட்டுப்படுத்த முயல்கின்றோம். நாங்கள் மக்களைத் தனிமைப்படுத்தி வைத்திருப்பதற்கும் அல்லது தனித்து வைத்திருப்பதற்கும் முயல்கின்றோம். இதன் மூலம் நிலைமை கையை மீறிப்போகாத நிலையை உறுதிசெய்ய முயல்கின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



22

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி 'காலைக்கதிர்' நடாத்தும்

# மாபெரும் சைவ சமய அறிவுப் போட்டி - 2021

## போட்டி விதிகள்

1. இந்தப் போட்டியில் ஆர்வமுடைய அனைவரும் பங்குபற்ற முடியும்.
2. 13.08.2021 முதல் எதிர்வரும் 06.09.2021 வரை காலைக்கதிரில் தினமும் வெளியாகும் கேள்விகளுக்குச் சரியான விடைகளை இதே தாளில் எழுதி, கூப்பனிலுள்ள விவரங்களை நிரப்பி அனுப்புவதன் மூலம் போட்டியினுள் நுழையலாம்.
3. சரியான விடைகளை எழுதி அனுப்புவர்களில் இருந்து தினமும் குலுக்கல் முறை மூலம் அந்த நாளுக்குரிய வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார். அத்துடன் முழு நாள்களிலும் சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று பேருக்கும் பணப் பரிசில்கள் உண்டு

## பரிசு விவரம் :

முழுப் போட்டிக்குமான முதலாம் இடம் - ரூபா 7,000.00
இரண்டாம் இடம் - ரூபா 5,000.00
மூன்றாம் இடம் - ரூபா 3,000.00
தினசரி வெற்றியாளர்கள் ஒவ்வொருவருக்கும் தலா - ரூபா 1,000.00

4. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்.
5. பரிசுக்குரியவர்கள் எதிர்வரும் 12.09.2021 அன்று காலைக்கதிர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படுவார்கள்.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

**1. புராண நன்னாயகம் எனச் சிறப்பிக்கப்படும் நூல் எதது?**

..............................................................................

**2. முருகப்பெருமான் தாரகனை வதஞ்செய்த இடம் எது?**

..............................................................................

**3. ஷண்மம் என்பதன் பொருள் என்ன?**

..............................................................................

**4. நல்லூர் கந்தசுவாமி கோவிலில் தற்போதுள்ள தேர் திருப்பணியை நிறைவேற்றிய கோயில் அதிகாரி யார்?**

..............................................................................

**5. கந்தபுராணத்தின் இறுதிப்படலம் எது?**

..............................................................................

சரியான பதில்கள், கூப்பன்களுடன் இணைக்கப்பட்டு தபால் மூலமாகவோ, நேரடியாகவோ கிடைக்கக் கூடியவாறு எதிர்வரும் 10.09.2021 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

காலைக்கதிர் - பசுமை ஊடக இல்லம்
30, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்

22

**பங்குபற்றுபவர்களின் விவரங்கள்:-**

1. முழுப் பெயர் : ----------------------------------------------
2. பிறந்த திகதி : ----------------------------------------------
3. கல்வி கற்கும் தரம் : ----------------------------------------
4. பாடசாலை : ------------------------------------------------
5. முகவரி : --------------------------------------------------

.............................................
கையொப்பம்

# காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு நீதிவேண்டி பாரிஸ் மனித உரிமைச் சதுக்கத்தில் கவனவீர்ப்பு!



வலிந்து காணாமலாக்கப்பட்ட தமிழர் உறவுகளுக்கு நீதிவேண்டி ஐ.நா. மனித உரிமைச்சாசன முன்வரைவு எழுதப்பட்ட பரிஸ் மனித உரிமைச் சதுக்கத்தில் இடம்பெற்றகவனவீர்ப்பு நிகழ்வு வெளிநாட்டவர்களது கவனத்தை பெற்றதாக அமைந்திருந்தது.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், தமிழீழ மக்கள் பேரவை ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வு, ஒகஸ்ட் 30 வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கான அனைத்துலக நாளில் இடம்பெற்றிருந்தது.

'தேசத்தின் வீரர்கள், தேசத்துக்காக மடிந்தவர்கள்' என்ற வாசகம் பொறிக்கப்பட்ட பிரென்ஸு தேச விடுதலையை மையப்படுத்தியிருந்த திடலில் முன்னே, காணமலாக்கப்பட்டவர்களின் படங்கள் தாங்கிய இருக்கைகள் இடப்பட்டிருந்தன.

வைக்கப்பட்ட ஒரு தொகுதி இந்த படங்கள் வலிந்து காணாமலாக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கானவர்களை குறியீட்டுரீதியாக அடையாளப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்திருந்தனர்.

தமிழர்கள் வலிந்து காணாமலாக்கப்பட்டமை, ஈழத்தமிழர்களுக்கு எதிரான சிறிலங்காவினது இனவழிப்பு மூலோபாயத்தின் ஒரு பகுதியே எனத் தெரிவித்துள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அமைச்சர் சுதன்ராஜ், இது தொடர்பில் அனைத்துலக விசாரணை வேண்டும் என்பதோடு, அனைத்துல குற்றவியல் நீதிமன்றத்தில் குற்றவாளிகள் நிறுத்தப்பட வேண்டும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் கோரிக்கை எனத் தெரிவித்திருந்தார்.

வலிந்துகாணாமலாக்கப்பட்டவர்களின்நாடுகளின் உலகபட்டியலில் சிறிலங்கா இரண்டாவது இடத்தில் இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டி தனது கருத்துரையில் பிரென்ஸு மொழியில் அமைச்சர் மகிந் தன் சிவசுப்ரமணியம் தெரிவித்திருந்தார்.

மனித உரிமைகளுக்காக, காணாமலாக்கப்பட்டவர்களுக்காக ஐ.நா. பல்வேறு தீர்மானங்களை முன்வைத்திருந்தாலும், அத்தீர்மானங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியை இதுவரை பெற்றுத்தரவில்லை என தனது விசனத்தை தமிழீழ மக்கள் பேரவையின் பிரதி திருச்சோதி தெரிவித்திருந்தார்.

கண்முன்னே நடக்கின்ற சாவுகளுக்கு அப்பால், வலிந்து காணாமலாக்கப்படுகின்றவர்களுக்கு கண்ணுக்கு தெரியாது நடக்கின்ற சம்பவங்கள் வலியிலும் கொடியது என மூத்த போராளி நாயகன் தெரிவித்திருந்தார்.

தாயகத்திலும் இடம்பெறுகின்ற தாய்மார்களின் போராட்டம், ஒட்டுமொத்த தேசத்தினதும் நீதிக்கான குரலாக உள்ளதெனத் தெரிவித்த தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் பிரதிநிதி மேத்தர், அர்ப்பணிப்புடன் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டியவர்களாக உள்ளோம் எனக்குறிப்பிட்டிருந்தார்.

தாய்மண்ணின் நீதிக்காக ஒருதாய் பிள்ளைகளாய் அமைப்புரீதியாக ஒருங்கிணைத்து இந்தப் போராட்டம் இடம்பெற்றது என நிகழ்வின் நிறைவில் குறித்துரைக்கப்பட்டது.



# இலங்கையில் எகிறும் அமெரிக்க டொலர்

## 226 ரூபாவுக்கு விற்பனை

அமெரிக்க டொலர் ஒன்றின் உண்மையான பெறுமதி தொடர்பான விடயம் தற்போது பாரிய சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளதாக மத்திய வங்கி தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை கடந்த செவ்வாய்க்கிழமை 204.89 ரூபாவாக பதிவானதாகஇலங்கைமத்தியவங்கிதெரிவித்துள்ளது.

எனினும் புதன்கிழமை வர்த்தக வங்கிகளின் பலவற்றின் நாணயமாற்று வீதத்திற்கமைய அரச வங்கிகளில் டொலர் ஒன்றின் விற்பனை விலை சிறிய சரிவை சந்தித்த நிலையில் தனியார் வங்கிகளின் விற்பனை விலை பாரிய அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

அதற்கமைய இலங்கை வரலாற்றில் முதல் முறையாக டொலர் ஒன்றின் விற்பனை விலை 226 ரூபாவாக பதிவாகியுள்ளது.

இலங்கை வங்கியின் டொலர் விற்பனை விலை 203 ரூபாவாக பதிவான நிலையில் மக்கள் வங்கி 204.99 ரூபாவாக பதிவு செய்துள்ளது. எப்படியிருப்பினும் கொமர்ஷல் வங்கி 226 ரூபாவாகவும், சம்பத் வங்கி 226.25 ரூபாவாகவும், ஹற்றன் நெஷனல் வங்கி 226 ரூபாவாகவும் செலான் வங்கி 225 ரூபாவாகவும் பதிவு செய்துள்ளது.

# கொவிட் தடுப்பூசிக் கொள்கையை மாற்ற முடிவு எடுத்தவர் யாவர்?

## நலிந்த ஜெயதிஸ்ஸ கேள்வி

60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்துவதற்கான தேசிய தடுப்பூசி கொள்கையை மாற்றுவதற்கான நியாயமற்ற முடிவின் விளைவை நாடு, இன்று எதிர்கொள்கிறது என்று ஜே.வி.பியின் முன்னாள் உறுப்பினர் நலிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதியும், கொவிட் செயலணியும் பதில் வழங்க வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

கொவிட் இறப்புகளில் 75 வீதத்துக்கும் அதிகமானோர் 60 வயதுக்கு மேற்பட்ட தடுப்பூசி செலுத்தாதவர்களிடையே நிகழ்ந்துள்ளது. இது தடுப்பூசி கொள்கையை மாற்றிய முடிவின் விளைவாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் இன்று மணித்தியாலத்துக்கு 9 கொவிட் இறப்புக்கள் நிகழ்கின்றன.அதில் 7 இறப்புக்கள் 60 வயதுக்கும் மேற்பட்டவர்களுடன் தொடர்புடையது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடுமுடக்கப்பட்டுள்ள நிலையில் நாள் ஒன்றுக்கு ஒரு லட்சம் பி.சி.ஆர். சோதனைகள் நடத்தப்பட வேண்டும். எனினும் தற்போது 25 ஆயிரத்துக்கும் குறைவான சோதனைகளே மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத் தடுப்பூசி போடுவதற்காக தேசிய தடுப்பூசி கொள்கையின்படி கடந்த ஜனவரி 8 ஆம் திகதி தயாரிக்கப்பட்ட அறிக்கை சுகாதார அதிகாரிகளுக்குத் தெரியாமல் கூட மாற்றப்பட்டது என்றும், இந்த தன்னிச்சையான, நியாயமற்ற முடிவு தற்போதைய பேரழிவை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையில், ஜனாதிபதி மற்றும் கொரோனா தடுப்பு செயலணியிடம், பத்து கேள்விகளை முன்வைப்பதாகவும், மக்கள் உண்மையான நிலைமையை அறியும் வகையில் அந்தக் கேள்விகளுக்கு பதிலளிக்குமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கொவிட் தடுப்பூசி கொள்கையை மாற்ற முடிவு எடுத்தது யார்? சினோபோர்ம் தடுப்பூசியின் ஒப்புதலை தாமதப்படுத்திய நிபுணர் தடுப்பூசிக் குழு அதிகாரிகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? கொவிட் தடுப்பூசிக்கு முன்னுரிமை கொடுப்பதை விட தம்மிக்க பாணிக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது ஏன்? பிரதேசங்களுக்குத் தடுப்பூசி வகைகளை ஒதுக்கீடு செய்தது யார்? பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் விலையை தீர்மானித்தது யார்? சுகாதார அதிகாரிகளை அவர்களின் பதவியில் இருந்து நீக்கியது யார்? தென்னாபிரிக்காவில் புதிய கொவிட் தோற்றம் மற்றும் டெல்டா பரவலுக்கு மத்தியில், இந்திய சுற்றுலாப் பயணிகளை அனுமதிக்க முடிவு செய்தவர் யார்? என்பவை உட்பட 10 கேள்விகளை நலிந்த ஜெயதிஸ்ஸ முன்வைத்துள்ளார்.

# அரசியல் வாழ்க்கையில் எடுத்த தவறான முடிவு!

## மங்கள குறித்து வெளியாகியுள்ள தகவல்கள்

கொவிட் தொற்றுக் காரணமாக அண்மையில் உயிரிழந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர கடைசி நாள்களில் பங்கேற்ற நேர்காணல்கள் தற்போது வெளியாகின்றன.

இதில் தனது அரசியல் வாழ்கையில் எடுத்த தவறான முடிவுகள் தொடர்பாக மங்கள சமரவீர கருத்து வெளியிட்டுள்ளார். இது தொடர்பில் கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

'ஐக்கிய தேசியக் கட்சி போன்ற நாட்டின் மிகப் பெரிய அரசியல் கட்சி பிளவுபடுவதைத் தடுக்க கடைசி தருணம் வரை போராடினார் எனவும், அதைத் தடுக்க இயலாமை தோல்வி என்றும் மங்கள குறிப்பிட்டுள்ளார் என அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி பிளவுபட்டிருப்பது மிகவும் வருத்தமளிப்பதாகவும், அவ்வாறு இல்லாதிருந்தால் இந்த அரசாங்கம் இருந்திருக்காது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தனது அரசியல் வாழ்க்கையில் எடுத்த முக்கிய தவறுகள் மற்றும் துரதிருஷ்டவசமான முடிவுகளில் இதுவும் ஒன்று என மங்கள சமரவீர சுட்டிக்காட்டியுள்ளார் என அந்தச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.09.2021 இல் வெளியிடப்பெற்றது.